# VIRUDHUNAGAR MUNICIPALITY FORM 3
## Minutes of the Meeting held on 08.03.2019

**விருதுநகர் நகர்மன்றம்**

| Date of Council meeti ng | Deceis on Numb er | Subject of the Agenda | Resolution |
|---|---|---|---|
| 08.03.2019 | 278 | **பொருள் – 1**<br>விருதுநகர் நகராட்சியில் நகராட்சி பயன்பாட்டிற்கென ஒரு ஈப்பு வாகனம் மட்டுமே உபயோகத்தில் உள்ளது. மேற்கண்ட வாகனத்தை பயன்படுத்த இந்நகராட்சியின் வளர்ச்சிப்பணிகள், பொதுமக்களின் அத்தியாவசியமான குடிநீர் பணிகள் மற்றும் இந்நகரை துாய்மையான நகரமாக மாற்றுவதற்கு உரிய துப்புரவு பணிகள் போன்ற பணிகளை தினசரி கண்காணிக்க வேண்டியிருப்பதாலும், இந்நகரிலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள நகராட்சியின் முக்கிய குடிநீர் ஆதாரமாக விளங்கும் ஆனைக்குட்டம், கோடைகால நீர்த்தேக்கம், ஒண்டிப்புலி, காரிசேரி நீர்தேக்கங்கள் சுமார் 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளதால் அதனை பார்வையிடுவதற்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வுக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும் செல்ல வேண்டியுள்ளது. மேலும் பயன்பாட்டில் உள்ள இவ்வாகனம் 15 வருடங்களுக்கு மேலாகி விட்டது. எனவே, புதியதாக ஒரு ஈப்பு வாகனம் வாங்குவதற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.241, நாள்.31.01.2019ல் ரூபாய்.10,00,000/– ( பத்து இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் உத்திரவு ந.க.எண். K.Dis.No.2779 / 2019 / P2 நாள்.08.03.2019ல் அனுமதி பெறப்பட்டுள்ளதன் பிரகாரம் வாகன கொள்முதல் மற்றும் காப்பீடு கட்டணம், சாலை வரி, வாகனம் பதிவு கட்டணம், வாகத்தினை கொண்டு வருவதற்கென ஆகும் கூடுதலாக வரப்பெறும் செலவின தொகை ஆகியவற்றை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் | அங்கீகரிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3080/2008/இ1.</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>279</td>
<td>பொருள் – 2<br>இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவு வாகன எண்.TN 67 B 3971-க்கு ஆண்டுபராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 22.02.2019-ஆம் நாளைய முன்அனுமதியினைத் தொடர்ந்து கீழ்கண்டுள்ள விபரப்படி விலைப்புள்ளிகளை பெறப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. பொது சுகாதாரப் பணியின் முக்கியத்துவம் கருதியும் பொது மக்களின் நலன் கருதியும், அவசர அவசியம் கருதியும் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>விபரம்</th><th>தொகை</th></tr>
<tr><td>1.</td><td>R.A.267, Srivilliputhur Block Agro Engg. And Service Co. op .Centre LTD</td><td>2,20,200/-</td></tr>
<tr><td>2.</td><td>SP.SPL.177. Rajapalayam Agro Engg. and Service Co.op centre LTD</td><td>2,39,200/-</td></tr>
<tr><td>3.</td><td>Ravi mohan Auto Sevice Virudhunagar</td><td>2,43,400/-</td></tr>
<tr><td></td><td></td><td></td></tr>
</table>
மேற்கண்டுள்ள விபரப்படி வரிசை எண்.1-னை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.152/2019/எச்1</td>
<td>அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>280</td>
<td>பொருள் – 3<br>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகன எண். TN 67 BD 8068-க்கு புதிய பேட்டரி பொருத்துதல் தொடர்பாக மன்ற பொருள் 22.02.2019ம் நாளைய முன் அனுமதி பெறப்பட்டுள்ளதைத் தொடர்ந்து கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>விபரம்</th><th>தொகை</th></tr>
</table></td>
<td>அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 1. | Sri Gayathri Power System-Virudhunagar | 6,900/- |
| 2. | Dhanush Auto Electric Works – Virudhunagar | 6,800/- |
| 3. | Sri Annamalai Battery Works - Virudhunagar | 6,500/- |

மேற்கண்டுள்ள விபரப்படி வரிசை எண்.3 - குறைந்த விலைப்புள்ளி கோரியுள்ள Sri Annamalai Battery Works - Virudhunagarக்கு பணி உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.857/2019/எச்1.

281

**பொருள் – 4**

விருதுநகர் நகராட்சி காமராஜர் பைபாஸ் ரோடு, க.எண்.67 /5Fல் பொதுபாதை ஆக்கிரமிப்பு சம்மந்தமாக திரு.த.பால்பாண்டி என்பவரால் விருதுநகர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கு ஓ.எஸ்.எண்.26 /2019ல் இந்நகராட்சியை எதிர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு நகராட்சி சார்பாக நகர்மன்ற வழக்கறிஞர் திரு.K.ரவி, ஆஜராகி வழக்கினை மேல் நடத்தலாம் என்ற விபரம் பரிந்துரை செய்யப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1541 / 2019/எப்.2

அங்கீகரிக்கப்பட்டது

282

**பொருள் – 5**

சொத்துவரி, வார்டு எண்.7 சத்யமூர்த்தி ரோடு, வரிவிதிப்பாளர் சீதாலட்சுமி, கதவு எண்.18, வரிவிதிப்பு எண்.132/7530 சொத்துவரி கேட்பில் 22,63,586 நிலுவையாக உள்ளது. மேற்படி நிலுவை தொகையினை வசூல் செய்ய வரிவிதிப்பாளருக்கு வசூல் நிலுவை தொகை செலுத்த அறிவிப்பு வழங்கப்பட்டதில் வரிவிதிப்பாளர் சீதாலட்சுமி என்பவர் OS No.25/2019 மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு 19/03/2019-ல் ஆஜராக நீதிமன்றத்திலிருந்து வரப்பட்ட கடிதப்படி நகராட்சி வழக்கறிஞர் நகராட்சி சார்பாக OS.No.25/2019 வழக்கறிஞருக்கு ஆஜராகவும் மேற்படி வழக்கினை தொடர்ந்து நடத்தி நகராட்சி சாதகமான தீர்பபு பெறவும் அதற்குன்டான வழக்கறிஞர் கட்டணத்திற்கு நகராட்சி பொது நிதியிலுருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அங்கிகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1544/2019/அ2.

அங்கீகரிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | 283 | **பொருள் – 6**<br>சொத்துவரி, வார்டு எண்.29 வரி விதிப்பு எண்.28232 சொத்துவரி உயர்வு செய்தது தொடர்பாக என்.புஷ்பம் மற்றும் என்.இன்பசேகரன் அவர்களால் மாவட்ட வழக்கு OS.No.24/2019 வழக்கானது 18/03/2019-ல் நகராட்சி சார்பில் ஆஜராக வரப்பட்ட நீதிமன்ற கடிதப்படி மேற்படி வழக்கிற்கு நகராட்சி சார்பாக ஆஜராகவும், மேற்படி வழக்கினை தொடர்ந்து நடத்தி நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு பெற்று தரவும் அதற்குண்டான வழக்கறிஞர் கட்டணம் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.<br><br>அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1543/2019/அ2. | அங்கீகரிக்கப்பட்டது |
| | 284 | **பொருள் – 7**<br>சொத்துவரி - வார்டு எண்.14 சந்திக்கூடம் தெரு வரி விதிப்பு எண்.132/014/00452, 132/14954 வரிவிதிப்பாளர் பெயர் சுசிலாதேவி அரையாண்டு வரி ரூ.3,670/- வீதம் சொத்துவரி கேட்பில் உள்ளது. வரிவிதிப்பாளர் சுசிலாதேவி அவர்களால் வரி உயர்வு ஆட்சேபணை தெரிவித்து OS No.19/2019 மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் விருதுநகரில் தொடரப்பட்ட வழக்கில் நகராட்சி ஆணையர் சார்பில் நகராட்சி வழக்கறிஞர் வழக்கில் ஆஜராகி நகராட்சிக்கு சாதகமான தீர்ப்பு பெற்றுதரவும், மேற்படி வழக்கிற்கு ஆகும் செலவு தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.<br><br>அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1038/2019/அ2 | அங்கீகரிக்கப்பட்டது |
| | 285 | **பொருள் – 8**<br>நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் 07.03.2019-ந் தேதிய ந.க.எண்: 50977/2018/டிபி3 சுற்றறிக்கையில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019-விதி எண் 23-ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி இந்நகராட்சி எல்கைக்கு உட்பட்ட பகுதிகளுக்குள் கட்டிட விண்ணப்பங்கள் தயார் செய்யும் பணிக்கு தொழில் சார்ந்த வல்லுநர்கள் நியமனம் செய்ய நடைமுறைகளில் (1) பரிசோதனைக்குழுவில் (Screening Committee) நகராட்சி ஆணையாளர் (2) நகரமைப்பு அலுவலர் (3) நகரமைப்பு ஆய்வாளர் ஆகிய மூன்று உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று அமைத்திட உத்திரவிடப்பட்டுள்ளதின் அடிப்படையில் மேற்காண் 3 உறுப்பினர்கள் கொண்ட பரிசோதனைக்குழு அமைத்திடவும் மற்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள 1 முதல் 7 வரையிலான நிபந்தனைகளுக்குட்பட்டும் பரிசோதனைக்குழு நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி | அங்கீகரிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td></td><td>286</td><td>பொருள் – 9<br>சொத்து வரி - தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1)(சி)-ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி சொத்துவரியிலிருந்து விளக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.7234/14/ஆர்1, நாள்.28.03.2018-தேதிய கடிதத்தில் கூறப்பட்டதின்படி அரசு உதவி பெற்று இயங்கிவரும் தனியார் பள்ளிகளின் பட்டியல் வருவாய் உதவியாளர்களால் வழங்கப்பட்டு மேற்படி கல்வி நிறுவனங்களுக்கு சொத்து வரி கேட்பிலிருந்து வஜா செய்ய வருவாய் ஆய்வாளர், வருவாய் அலுவலர் குறிப்பு படி கீழ்கண்ட அரசு உதவி பெற்று இயங்கிவரும் தனியார் பள்ளி கட்டிடங்களின் சொத்து கேட்பிலிருந்து வரி விலக்களிக்கவும் சொத்து நிலுவை தொகையினை வஜா செய்யவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு<br><br>
<table>
<tr><th>வ.எண்.</th><th>வார்டு எண்.</th><th>வரிவிதிப்பு எண்.</th><th>பள்ளியின் பெயர்</th><th>சொத்து வரி நிலுவை தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>3</td><td>132/003/01375</td><td>TVS நடுநிலைப்பள்ளி புளுகனூரணி ரோடு</td><td>200130</td></tr>
<tr><td>2.</td><td>4</td><td>132/004/02354</td><td>KVS ஆண்கள் மேல்நிலைப்பள்ளி கச்சேரி ரோடு</td><td>15,39,558</td></tr>
<tr><td>3.</td><td>4</td><td>132/004/02360</td><td>CSI தொடக்கப்பள்ளி கச்சேரி ரோடு</td><td>10101</td></tr>
<tr><td>4.</td><td>12</td><td>132/012/00972</td><td>K.KVS</td><td>122079</td></tr>
<tr><td>5.</td><td>16</td><td>132/016/01006</td><td>ஹாஜ் சிக்கந்தர் ஹவ்வா பீவி நடுநிலைப்பள்ளி பாவாலிரோடு</td><td>122079</td></tr>
<tr><td>6.</td><td>18</td><td>132/018/00881</td><td>ஹவ்வா பீவி மகளிர் மேல்நிலைப்பள்ளி சீதக்காதி</td><td>137307</td></tr>
</table></td><td>அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தெரு | |
| 7. | 18 | 132/018/00882 | ஹாஜிபி செய்யது முகம்மது நடுநிலைப்பள்ளி பாரபட்டி தெரு | 126090 |
| 8. | 21 | 132/021/00466 | ஹாஜிபி செய்யது முகம்மது மேல்நிலைப்பள்ளி கிருஷ்ணமாச்சாரி ரோடு | 161118 |
| 9. | 24 | 132/024/00752 | க்ஷத்திரிய மகளிர் மேல்நிலைப்பள்ளி கிருஷ்ணமாச்சாரி ரோடு | 1459935 |
| 10. | 24 | 132/024/00772 | எஸ்.வி.அண்ணாமலை அம்மாள் பெண்கள் நடுநிலைப்பள்ளி கிருஷ்ணமாச்சாரி ரோடு | 368664 |
| 11. | 26 | 132/026/00708 | க்ஷத்திரிய பெண்கள் நடுநிலைப்பள்ளி அருப்புகோட்டை ரோடு | 243957 |
| 12. | 26 | 132/026/00707 | RC தொடக்கப்பள்ளி முனிசிபல் ஆபிஸ் ரோடு | 92142 |
| 13. | 27 | 132/027/00578 | சரஸ்வதி வித்யலாயா பள்ளி மாலைகோவில் தெரு | 63177 |
| 14. | 28 | 132/028/00490 | TELC நடுநிலைப்பள்ளி ஆண்டி கிணறு தெரு | 36129 |
| 15. | 30 | 132/030/01084 | சுப்பிரமணிய வித்யசாலா பள்ளி வள்ளி குட்டி தெரு | 135111 |
| 16. | 31 | 132/031/01890 | கே.பி.பெரியசாமி நாடார் பள்ளி | 41067 |
| 17. | 31 | 132/031/01891 | வி.பி.பெரியசாமி நாடார் பள்ளி | 6093 |
| 18. | 33 | 132/033/01056 | சௌடாம்பிகா மேல்நிலைப்பள்ளி | 82257 |

<table>
<tr><td></td><td></td><td>

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கவுண்டம்மன் கோவில் தெரு | |
| 19. | 33 | 132/033/01057 | சௌடாம்பிகா தொடக்கப்பள்ளி குல்லூர் சந்தை ரோடு | 60738 |
| 20. | 34 | 132/034/00830 | A.P. சங்கரலிங்க நடுநிலைப்பள்ளி லிங்க் ரோடு | 69861 |
| மொத்தம் வஜா தொகை | | | | ரூ.5036478 |

மாவட்ட கல்வி அலுவலர், விருதுநகர் அவர்களது கடிதம் ஓ.மு.எண். 3625/அ1/2018 நாள்: 16/7/2018 தேதிய கடிதப்படி விருதுநகர் மாவட்ட தனியார் பள்ளிகள் பெயர் பட்டியல் அரசு பள்ளிகள் தவிர்த்து மொத்தமாக அனுப்பப்பட்டதன் அடிப்படையில் கடிதத்துடன் அனுப்பப்பட்டுள்ள மொத்த பள்ளி கட்டிடங்களுக்கும் நகராட்சியால் கேட்பு எழுப்பப்பட்டுள்ளது. துமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1) (சி) படி அரசு உதவி பெற்று இயங்கி வரும் பள்ளிகளுக்கு சொத்துவரி கேட்பிலிருந்து விலக்களிக்க வருவாய் உதவியாளர், வருவாய் ஆய்வாளர், வருவாய் அலுவலரால் வழங்கப்பட்ட குறிப்பின் படி அரசு உதவி பெற்று இயங்கி வரும் மேற்படி பள்ளி கட்டிடங்களை சொத்துவரி கேட்பிலிருந்து விலக்களிக்கவும், மேற்படி ரூ.5036478/- வஜா செய்யவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்1760/18/அ2.</td><td></td></tr>
<tr><td></td><td>287</td><td>பொருள் – 10<br>விருதுநகர் நகராட்சியின் 2019-2020ஆம் ஆண்டிற்கான வருவாய் மூலதனநிதி, குடிநீர் வடிகால் வழங்கல் நிதி, ஆரம்ப கல்வி நிதி ஆகியவைகளுக்கான உத்தேச வரவு செலவு மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கும் முன்அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.பி2 / 0528 / 2019.</td><td>அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>288</td><td>பொருள் – 11<br>விருதுநகர் நகராட்சி 01.10.2018 முதல் ஒப்பந்தகாரர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் GST பதிவு செய்வதற்கு AJ & Co, விருதுநகர் நிறுவனத்திற்கு பதிவு கட்டணம் தொகையாக ரூ.2000/- (இரண்டாயிரம்) வழங்கியதற்கும், அதற்கான செலவினத்திற்கும் நகர்மன்றத்தின் அனுமதி</td><td>அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.பி2 / 0528 / 2019 | |
| | 289 | **பொருள் – 12**<br>விருதுநகர் நகராட்சி சொத்துவரி நீண்ட காலம் நிலுவையாக உள்ள சொத்துவரி வழக்கு கோப்புகளில் நகராட்சிக்கு பாதகமாக தீர்ப்புரை பெற்றுள்ளதால் வரிவசூல் மேல்நடவடிக்கை தொடரப்படாமல் நிலுவையாக சொத்துவரி தொடர்ந்து வரப்பட்டு வருவதால் வழக்கு கோப்புகள் படி நிலுவையாக உள்ள சொத்துவரி இனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு தீவிர வரிவசூல் நடவடிக்கை மேற்கொள்ள நிலுவையாக உள்ள வழக்கு கோப்புகளின் மீது நகராட்சி வழக்கறிஞரின் சட்ட கருத்துரு பெற கடிதம் அனுப்பவும், சட்ட கருத்துரு பெறுவதற்கு நகராட்சி வழக்கறிஞர்க்கு வழக்கு கட்டணம் வழங்க நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும், மேலும், **2018–2019** சொத்துவரி சீராய்வின் மீது வரி உயர்வுக்கு ஆட்சேபணை செய்யப்பட்டு வரப்பட்ட சொத்துவரி சீராய்வு **2018–2019** வழக்கு கோப்பு இனங்கள் மீது நகராட்சி வழக்கறிஞர் நகராட்சி சார்பாக வாதாடவும், அதற்கான வழக்கறிஞர் கட்டணம் நகராட்சி பொதுநிதியிலிருந்து உத்தேச வழக்கு கட்டணம் ரூ.**300000/–**ற்கு செலவு செய்ய மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.<br>ந.க.எண். 1190 / 2019 / A2. | அங்கீகரிக்கப்பட்டது |
| | 290 | **பொருள் – 13**<br>இந்நகராட்சிக்கு ஆண்டு குத்தகையினங்கள் பழைய பேருந்து நிலையம் எதிர்புறம் உள்ள இருசக்கர வாகன காப்பகத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் பழைய பேருந்து நிலையம் உட்புறம் 2 தெலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம் பழைய பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு<br><br>நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம் பழைய பேருந்து நலையத்திற்குள் உள்ள கட்டணக் கழிப்பறையில் வசூலிக்கும் உரிமம் மற்றும் பழைய பேருந்து நிலையம் உட்புறம் உள்ள மாடியில் 5 தங்கும் விடுதியில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் ஆகிய 5 குத்தகையினம் குத்தகை தாரர்கள் 2015-16 முதல் 2017-18 வரை குத்தகை தொகையை செலுத்தாததால் அவற்றை நகராட்சியால் கையகப்படுத்தப்பட்டு துறைரீதியாக வசூல் மேற்கொள்ளப்பட்டு வந்து பின்னர் பொது ஏலத்தின் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டு வந்துள்ள நிலையில் மேற்படி நிலுவைத்தொகையினை வசூல் செய்யும் பொருட்டு அவர்கள் மீது நீதிமன்றம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள இந்நகராட்சி வழக்கறிஞர் திரு.கே.இரவி பி.ஏ.பி.எல், | அங்கீகரிக்கப்பட்டது |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மூலம் வழக்கு தாக்கல் செய்ய ஆகும் செலவு தொகை 5 குத்தகையினத்திற்கும் தனித்தனியே கீழ்கண்ட விபரப்படி வழக்கறிஞர் பில் வழங்கியுள்ளார்.<br>**1.பழைய பேருந்து நிலையம் இருச்சக்கர வாகன காப்பகம்**<br>1.மவுண்ட் பீஸ் - ரூ..1,25,800/-<br>2.வழக்கறிஞர் கட்டணம் - ரூ.10,000/-<br>3.டைப் மற்றும் இதரம் - ரூ.1,000/-<br>4.நீதிமன்றக் கட்டனம் - ரூ.5,000/-<br>-----------------------------------<br>ரூ.1,41,800/-<br>----------------------------------<br>**2.பழைய பேருந்துநிலையம் உட்புறம் 2 தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்தல்**<br>1.மவுண்ட் பீஸ் - ரூ..5,800/-<br>2.வழக்கறிஞர் கட்டணம் - ரூ.10,000/-<br>3.டைப் மற்றும் இதரம் - ரூ.1,000/-<br>4.நீதிமன்றக் கட்டனம் - ரூ.5,000/-<br>---------------------------------<br>ரூ.21,800/-<br>-------------------------------<br>**3.பழைய பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையம் பேருந்து நுழைவுக் கட்டணம்**<br>1.மவுண்ட் பீஸ் - ரூ..1,29,300/-<br>2.வழக்கறிஞர் கட்டணம் - ரூ.10,000/-<br>3.டைப் மற்றும் இதரம் - ரூ.1,000/-<br>4.நீதிமன்றக் கட்டனம் - ரூ.5,000/-<br>---------------------------------<br>ரூ.1,45,300/-<br>-------------------------------<br>**4.பழைய பேருந்து நிலையம் கட்டணக் கழிப்பறை**<br>1.மவுண்ட் பீஸ் - ரூ.46,500/-<br>2.வழக்கறிஞர் கட்டணம் - ரூ.10,000/-<br>3.டைப் மற்றும் இதரம் - ரூ.1,000/-<br>4.நீதிமன்றக் கட்டனம் - ரூ.5,000/- | |

| | | | |
|---|---|---|---|
| | | ------------------------------- <br> ரூ.62,500/- <br> ------------------------------- <br> **5.பழைய பேருந்து நிலையம் 5-தங்கும் விடுதி** <br> 1.மவுண்ட் பீஸ் - ரூ.5,800/- <br> 2.வழக்கறிஞர் கட்டணம் - ரூ.10,000/- <br> 3.டைப் மற்றும் இதரம் - ரூ.1,000/- <br> 4.நீதிமன்றக் கட்டனம் - ரூ.5,000/- <br> --------------------------------- <br> ரூ.21.800/- <br> ---------------------------------- <br> மேற்படி 5 குத்தகையினத்திற்கு ஆகும் செலவு தொகை ரூ.3,93,200/-ஐ வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும். <br><br> **அலுவலகக்குறிப்பு :** <br> மேற்படி 5 குத்தகையினத்திற்கும் குத்தகை நிலுவை தொகை வசூல் செய்யவும் நடவடிக்கைக்காக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய ஆகும் செலவினத்தொகை ரூ.3,93200/-ஐ மன்றத்தின் அனுமதி வழங்கலாம். <br> **ந.க.எண்.12511/அ1/2014** | |
| | 291 | **பொருள் – 14** <br> தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன் பிரிவு 306 (28A)ன் கீழ் திருத்தியமைக்கப்பட்ட அறிவிக்கை எண்.75 நாள் 21.02.2019ன் படி விருதுநகர் மாவட்ட சிறப்பு வெளியீடு அரசிதழ் எண். 27.10.2017 வரிசை எண். 7, 7(1),7(2),7(3),7(4) ,மற்றும் அட்டவணை 1 ஐ நீக்கம் செய்து ஏற்படுத்தப்படும் உப விதிகள் <br> தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன் பிரிவு 306(28A)ன் கீழ் திருத்தியமைக்கப்பட்ட அறிவிக்கை எண்.75 நாள் 21.02.2019ன் படி விருதுநகர் மாவட்ட சிறப்பு வெளியீடு அரசிதழ் எண். 27.10.2017 வரிசை எண். 7, 7(1),7(2),7(3),7(4), மற்றும் அட்டவணை 1 ல் ஆகிய விதிகள் நீக்கம் செய்யப்பட்டு அதற்கு பதிலாக ஒருமுறை பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை (Use and throwaway plastic) சேகரித்தல் (Storage) வழங்குதல் (Supply) கொண்டு செல்லுதல் (Transport) விற்பனை செய்தல் (Sale) | அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் பகிர்ந்தளித்தல் (Distribution) ஆகியவற்றை தடை செய்து மேற்கண்ட துணை விதிகளை மீறுகின்ற நபருக்கு கீழ்க்கண்டவாறு அபராதம் விதிக்கவும் துணைவிதிகள் ஏற்படுத்தலாம்.<br>1. (i) **செயலாக்கஅதிகாரி :** நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவர்.<br>(ii) **ஆய்வு நடத்தும் அதிகாரி:** ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவுபணி மேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர், துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையளரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.<br>(iii)**மேல்முறையீட்டு அலுவலர்:** இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல்முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.<br>(iV)**தண்டனைகள் விதிக்கும் முறைகள்:** இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறுபவர்களுக்கு முதல்முறை இரண்டாம் முறை மற்றும் மூன்றாம் முறையான குற்றத்திற்கு அட்டவணை 2ல் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அபராதத்தை குற்றம் நடைபெறுகின்ற இடத்திலேயே (Spot fine) வசூலிக்கப்படுவதுடன் தடைசெய்யப்பட்ட நெகிழிகள் பறிமுதல் செய்யப்படும். நான்காவது முறையாக மீறுபவருக்கு உடனடியாக தொழில் உரிமம் இரத்து செய்யப்படும்.<br>**2. வர்த்தகநிறுவனங்களின் வகைப்பாடு:**<br>I. மொத்தமாக (Whole Sale) சேமித்தல்/வழங்குதல்/கொண்டுசெல்லுதல்/விற்பனைசெய்தல்/ பகிர்ந்தளித்தல்<br>II. வணிகவளாகங்கள், துணிக்கடைகள்பல்பொருள்அங்காடிகள்,திரைஅரங்குகள், திருமணமண்டபங்கள், மதுபானகூடங்கள், தொழிற்சாலைகள், பள்ளி கல்லூரி நிறுவனங்கள் மற்றும் பெரிய வணிகநிறுவனங்கள்.<br>III. மளிகை கடைகள், மருந்துகடைகள், பழக்கடைகள், காய்கறி கடைகள், இறைச்சி மற்றும் மீன் கடைகள் முதலானவைகள்,<br>IV.சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோரக்கடைகள் மற்றும் இதரவணிகநிறுவனங்கள்.<br>3. **இந்த துணைவிதியை மீறினால் செலுத்தும் அபராதம்:–**<br>இந்த துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கைகாலம் 30 நாட்கள் ஆகும். அதற்கும் பிறகும் இந்த துணைவிதிகளை மீறுதல் இருந்தால் அபராதஅ ட்டவணைப்படி இந்த துணை விதிமீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராததொகையுடன் | |

தண்டிக்கப்படுவார்.

4. அட்டவணைII.ல் குறிப்பிட்ட படி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோஎனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகரகாவல்சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறைசட்டம் / மாவட்ட நகராட்சிகள்சட்டம் 1920 / பொதுசுகாதாரசட்டம் 1939ன் படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

5. மேல்முறையீட்டுக்கு உரிமை :

விருதுநகர் நகராட்சியின் இந்த துணைவிதிகளில் பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல்முறையீடு செய்ய உரிமையுள்ளவர்கள் ஆவர். இந்ததுணைவிதிகள் விருதுநகர் நகராட்சி நகர்மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்துள்ளன

.6. **தண்டனைகள் விபரம்:–**

அட்டவணை II

பிரிவு 306 (28A) ன் படி இயற்றப்பட்ட துணைவிதிகளை மீறுவதற்கான தண்டங்கள்

| வரிசை எண் | குற்றங்கள் | முதன் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| I | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல் வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 25000 | 50000 | 100000 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | II | வணிக வளாகங்கள் துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 10000 | 15000 | 25000 |
| | | III | மளிகைக்கடைகள்மற்றும் மருந்துக்கடைகள்போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்டநெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 1000 | 2000 | 5000 |
| | | IV | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல்மற்றும் பகிர்ந்தளித்தல் | 100 | 200 | 500 |

ந.க.எண்.2072 / 2017 /எச்.1

| | | | |
|---|---|---|---|
| | 292 | **பொருள் – 15**<br>விருதுநகர் நகராட்சி நூற்றாண்டு விழா 2014–15ம் ஆண்டிற்கு நகராட்சிப் பகுதிகளில் பணிகள் மேற்கொள்ள ரு 25.00கோடிக்கு தமிழக அரசால் அரசாணை எண். 56 நாள்.14.05.2014ல் உத்தரவு வழங்கப்பட்டது. இத்திட்டத்தில் சாலை பணிகள் மேற்கொள்ள தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு பணிகள் திட்டம் 2014–15ம் ஆண்டில் ரு 1420.00இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களால் நிர்வாக அனுமதி ந.க.எண்.14044/2014/இ3. நாள்.19.12.2014ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் சிப்பம் 4ல் டிகேசி பெரியசாமி தெரு,வேல்சாமி நகர் குறுக்குத் தெரு,அழகர்சாமி | அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | தெரு, எம்.கே.அய்யான் தெரு,டாக்டர் அம்பேத்கார் தெரு, கஸ்தூரி பாய் தெரு, வீராச்சாமி இரண்டாவது தெரு,நக்கீரர் தெரு,உள்தெரு,எஸ்.வி.பி.என்.எஸ்.தெரு,பி.பி.வையாபுரி தெரு ஆகிய தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் (பெயர் பலகையுடன்) ரு269.00இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள 30.01.2015ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு திரு.ம.அஷ்ரப் அலி என்பவருக்கு ந.க.எண்.11167/2013–14/இ3 நாள்.12.02.2015ன்படி வேலை உத்தரவு வழங்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட சிப்பம் 4ல் உள்ள உள்தெருவில் பேவர் பிளாக் அமைக்கும் பணிக்கு ரு35.00 இலட்சம் மதிப்பீடு தொகை ஆகும். மேற்கண்ட உள்தெருவில் பாதாள சாக்கடைப் பணி துவங்காத நிலையில், சாலைப்பணி மேற்கொண்டால் குறுகிய காலத்தில் பேவர் பிளாக் சாலை பழுதடைந்து பொதமக்களுக்கு இடையூறாக அமைந்துவிடும் என்பதாலும், விருதுநகர் நகர் நல அமைப்பின் 15.06.2016ந் தேதிய வேண்டுகோளின்படியும் பொதுமக்கள் பெரிதும் பயன்படுத்தப்படும் உள்தெருவின் இணைப்பு சாலையான கீழக்கடைத் தெருவில் பேவர் பிளாக் தளம் மதிப்பீட்டிற்கு மிகாமல் அமைக்க ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டு பணி நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டது என்ற விவரத்தின் அறிக்கையினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு– மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>கோப்பு எண்.11167/2013–14/இ3 | |
| | 293 | **பொருள் – 16**<br>விருதுநகர் நகராட்சி எல்கைக்குள் கட்டப்படும் கட்டடங்கள் மற்றும் அதனை சார்ந்த பிற<br><br>கட்டமைப்புகளுக்கும் கட்டிட உரிமம் வழங்குவதற்கு 01.09.2009–ல் நிர்ணயம் செய்யப்பட்ட உரிம<br><br>கட்டணங்கள் தற்போதும் வசூலிக்கப்பட்டு வருகிறது. மேற்படி கட்டணம் 10 வருட காலமாக உயர்த்தப்டாமல்<br><br>அதே கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. எனவே, 1920–ம் ஆண்டு திருத்தப்பட்ட தமிழ்நாடு<br><br>மாவட்ட நகராட்சிகளின் 5–வது சட்டத்தின் பிரிவுகள் 175,176,173,197,199,200,201,204,207,208,249,<br><br>250 ஆகியவற்றின் கீழ் கட்டிட உரிமங்கள், உரிம ஆணைகள், அனுமதிகள் மீதான கட்டணங்களின் மாறுதல்கள் இந்நகராட்சியின் நிதி நிலையை அதிகரிக்கும் பொருட்டு,<br><br>1. திருத்தப்பட்ட 1920–ம் ஆண்டு தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 321(2)–ன்படி கீழ் கண்டவாறு உரிமக்கட்டணத்தை மாற்றி அமைக்கவும். | அங்கீகரிக்கப்பட்டது |

2. மேலே கூறப்பட்ட செயல்களுக்கு நிர்வாக அதிகாரியிடமிருந்து உரிமை ஆணை இல்லாமலும், உரிம கட்டணங்களை செலுத்தாமலும், உரிம ஆணையிலும், துணை சட்டங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்படாமலும் பயன்படுத்தக்கூடாது என்று அறிவிக்கவும்.

இந்நிலையில் அரசாணை நிலை எண்:18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் (MAI) துறை நாள்:04.02.2019–இன் படி தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ன் படி 04.02.2019 முதல், அனுமதிக்காலப் மூன்று ஆண்டுகள் என்பதனை ஐந்து ஆண்டுகள் என மாற்றி அரசாணை வெளியிடப்பட்டுள்ளதால் 04.02.2019 முதல் கட்டண விகிதங்கள் மாற்றம் செய்து நடைமுறைப்படுத்திட அவசியம் எழுந்துள்ளது.அதன்படி திருத்திய கட்டணப் மற்றும் உரிம கால விபரங்கள் குறிப்பிட்டு தயார் செய்த மன்றப்பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. இதனை தினசரி நாளிதழ்களிலும், மாவட்ட அரசிதழ்களிலும் வெளியீடு செய்ய ஆகும் செலவு தொகைக்கும் மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

1. திருத்திய கட்டண கட்டிட உரிமையாணைக் கட்டணம் வசூல் செய்ய மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. தினசரி நாளிதழ், மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய ஆகும் செலவுத் தொகைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.977 / 2019 / எப்.2

விருதுநகர் நகராட்சி

திருத்திய கட்டிட உரிமையாணைக் கட்டணம் 04.02.2019 முதல்

| வ.எண் | தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் | விவரம் | அளவு / 1 எண்ணம் | தற்போது வசூலிக்கப்பட்டுவரும் கட்டணம் | நடைமுறையில் கொண்டு வரப்பட உள்ள உரிமக் கட்டணம் | உரிமையாணை காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | 197(1) (பி)மற்றும் 201, 215 | குடிசை அல்லாத ஒரு கட்டிடத்தை அல்லது புதுப்பித்துக் கட்ட (மாறுதல் செய்தல்) கூடுதல் கட்டிடம் கட்டுதல் முதலியன | | | | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அடங்கும்) அனுமதி அளித்தல் | | | | | | |
| | | அ) | 197(1)(பி)<br>மற்றும் 201, 215 | அ) தட்டோடு ஆர்.சி.சி. குடியிருப்பு கட்டிடம் தரை கீழ் தளம் மற்றும் தரைத்தளம் உரிமையாணைக் கட்டணம் | 10 சதுர மீட்டருக்கு | 100 | 200 | 5<br>ஆண்டுகள் | | |
| | | ஆ) | 197(1)(பி)<br>மற்றும் 201, 215 | ஆ) தட்டோடு ஆர்.சி.சி.குடியிருப்பு கட்டிடம் முதல்தளம் கட்டிடம் கட்ட | 10 சதுர மீட்டருக்கு | 150 | 300 | 5<br>ஆண்டுகள் | | |
| | | இ) | 197(1)(பி)<br>மற்றும் 201, 215 | இ) தட்டோடு ஆர்.சி.சி. குடியிருப்பு கட்டிடம் கட்ட இரண்டாம் தளம் மற்றும் அதற்கு மேல் உள்ள ஒவ்வொரு தளத்திற்கும் | 10 சதுர மீட்டருக்கு | --- | 400 | 5<br>ஆண்டுகள் | | |
| | | 2 | 197(1)(அ) | அ) மனை அங்கீகாரம் வழங்க (குடியிருப்பு) | 300 சதுர மீட்டர் வரை | 200 | 300 | 5<br>ஆண்டுகள் | | |
| | | 6 | 197(1)(அ) | ஆ) மனை அங்கீகாரம் வழங்க (குடியிருப்பு அல்லாத இனங்கள்) | 300 சதுர மீட்டர் வரை | 300 | 600 | 5<br>ஆண்டுகள் | | |
| | | 7 | 197(1)(அ) | இ) மனை அங்கீகாரம் வழங்க (குடியிருப்பு ) | 300 சதுர மீட்டருக்கு மேல் | --- | 600 | 5<br>ஆண்டுகள் | | |
| | | | 197(1)(அ) | ஈ) மனை அங்கீகாரம் வழங்க (குடியிருப்பு அல்லாத இனங்கள்) | 300 சதுர மீட்டருக்கு மேல் | --- | 900 | 5<br>ஆண்டுகள் | | |
| | | 8 | 197(1)(பி)<br>மற்றும் 201, 215 | இ) குடியிருப்பு அல்லாத ஒவ்வொரு தளத்திற்கும் உரிமையாணைக் கட்டணம் தட்டோடு ஆர்.சி.சி. மற்றும் ஏ.சி.சீட் தரைத்தளம் மற்றும் தரைகீழ் தளத்திற்கு (Ground Floor) & Cellar room உரிமையாணைக்கட்டணம் | 10 சதுர மீட்டருக்கு | 200 | 400 | 5<br>ஆண்டுகள் | | |
| | | | 197(1)(பி)<br>மற்றும் 201, 215 | முதல் மாடிக் கட்டிடம் தட்டோடு ஆர்.சி.சி மற்றும் ஏ.சி.சீட் கட்டுமானம் | 10 சதுர மீட்டருக்கு | 250 | 500 | 5<br>ஆண்டுகள் | | |
| | | | 197(1)(பி)<br>மற்றும் 201, 215 | இரண்டாம் தளம் அதற்கு மேல் கட்ட உள்ள ஒவ்வொரு தளத்திற்கு உரிமையாணை கட்டணம்<br>குடியிருப்பு அல்லாத கட்டிடம்<br><br>மாடிப்படி கட்ட அல்லது புதுப்பிக்க | 10 சதுர மீட்டருக்கு<br><br><br><br>ஒவ்வொன்றுக்கும் | 250<br><br><br><br>50 | 600<br><br><br><br>100 | 5<br>ஆண்டுகள்<br><br><br><br>5<br>ஆண்டுகள் | | |
| | | | | புதிதாக கழிப்பிடம் கட்ட அல்லது | ஒவ்வொன்றுக்கும் | 50 | 100 | 5 | | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | புதுப்பிக்கக் கட்டணம் | | | | ஆண்டுகள் | | |
| | | | | புதிய குளியல் அறை அல்லது பழையதை புதுப்பித்துக் கட்ட உரிமையாணை கட்டணம் | ஒவ்வொன்றுக்கும் | 50 | 100 | 5 ஆண்டுகள் | | |
| | | | | செப்டிக் டேங்க் புதிதாக கட்ட அல்லது புதுப்பித்துக் கட்ட | ஒவ்வொன்றுக்கும் | 50 | 100 | 5 ஆண்டுகள் | | |
| | | | | குளியல் அறையுடன் கூடிய கழிவறை புதியதாகக் கட்ட அல்லது புதுப்பித்துக் கட்ட | ––– | 300 | 400 | 5 ஆண்டுகள் | | |
| | | | | 1) காம்பவுண்டு சுவர் அல்லது வேலி அமைத்தல் | ஒவ்வொரு 10 மீட்டர் நீளத்திற்கும் அதன் பாகத்திற்கும் ஒவ்வொரு மனுவுக்கும் | 100 | 200 | 5 ஆண்டுகள் | | |
| | | | | 2)கட்டிட மேல் முறையீடு | ஒரு எண்ணத்திற்கு | 500 | 1000 | ஒருமுறை | | |
| | | | 208,210 | 3)குடிசை, கிடுகு செட் முதலியன கட்டுவதற்கு குடிசை என்ற பதத்தில் வரும் தற்காலிக அமைப்பு அல்லது போன்ற சிறிய கட்டிட அமைப்பு | 10 சதுர மீட்டரக்கு | 100 | 200 | 5 ஆண்டுகள் | | |
| | | | | பழைய கட்டுமானத்தை இடித்து அப்புறப்படுத்த | 10 சதுர மீட்டரக்கு | –– | 100 | –– | | |
| | | | | Master Plan, DDPlan வரைபட நகல் வழங்க முழுமை திட்டம், விரிவு அபிவிருத்தி திட்டம் | 1 எண்ணத்திற்கு | –– | 1000 | –– | | |
| | | | | மனைப்பிரிவு மனை உட்பிரிவு மனை ஒருங்கிணைப்பு போன்ற இனங்களுக்கு நகல் வழங்க (Layout plan. Sub-Division Plan Plot Sub-Division. Plot clubbing Plan நகல் வழங்க | 1 எண்ணத்திற்கு | –– | 500 | –– | | |
| | | | | Town Map A2 Size நகரமைப்பு | –– | –– | 400 | –– | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | வரைபடம் | | | | |
| | | Town Map A3 Size நகரமைப்பு வரைபடம் | –– | –– | 500 | –– |
| | 207,197 முதல் 199 வரை | 1)கிணறு வெட்ட அனுமதி அளித்தல் இட அமைப்பு ஒப்புதலுக்கு | ஒவ்வொரு கிணற்றுக்கும் ஒருமுறை | 200 | 300 | 5 ஆண்டுகள் |
| | | 2)கிணறுவெட்ட அல்லது புதுப்பித்து வெட்ட அனுமதி அளித்தல் (குழாய் கிணறு தோண்டுதல் இதில் அடங்கும் (Well ) or (Borewell) | ஒவ்வொரு கிணற்றுக்கும் ஒருமுறை | 200 | 300 | 5 ஆண்டுகள் |
| | | 3)கட்டிட வரைபட நகல் ஒன்றுக்கு | ஒருமுறை | 100 | 200 | –– |
| | | 4) கட்டிட படவரைவாளர் உரிமம் காப்புத் தொகை | ஒருமுறை | 1000 | 2000 | –– |
| | | 5)படவரைவாளர் பரிசீலனைக் கட்டணத் தொகை | ஒருமுறை | 250 | 1000 | ஒருஆண்டுக்கு |
| | | 6)படவரைபாளர் பரிசீலனைப் புதுப்பித்தல் கட்டணத் தொகை | ஒருமுறை | 250 | 1000 | ஒருஆண்டுக்கு |
| | | தெருவோரங்களில் இடிபாடுகள் மற்றும் கட்டுமான பொருள்களை சேகரித்து வைக்க கட்டிட உரிமம் கட்டணத்தில் 75% வசூல் செய்யப்படும் (குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாத இனங்களுக்கு) | ஒருமுறை | ––– | ––– | ––– |
| | | **குறிப்பு** | | | | |
| | | 1)முன் அனுமதி பெறாமல் துவக்கப்படும் அல்லது கட்டும் கட்டிடங்களுக்கு 50 சதவீதம் கட்டணம் உரிமையாணைக் கட்டணத்தில் கூடுதலாக வசூலிக்கப்பட வேண்டும். | ––– | ––– | ––– | ஒருமுறை |
| | | 2)கட்டிட உரிமம் முடிவடையும் காலத்திற்குமுன்னர் கட்டிட உரிமத்தை அனுமதிக்கப்பட்ட | கட்டிட பணி துவங்கப்பட்டிருக்க கூடாது | | கட்டிட உரிமை பெறப்பட் | புதுப்பித்தல் காலம் 3 ஆண்டுகளி |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | காலத்திற்குள் புதுப்பிக்க வேண்டும். | | | ட போது செலுத்திய அதிக அளவு உரிமையாணை கட்டணம் | ல் மட்டும் (ஒருமுறை) | | |
| | | | 175, 176,177 | 2)குடியிருப்பு மனைப்பிரிவு காலி நிலத்தை தெருக்களாகவும் வீட்டு மனைகளாகவும் பிரித்து (Layout) அங்கீகாரம் பெற | ஒரு ஹெக்டேர் அதன் பாகத்திற்கும் | 3000 | 5000 | ஒருமுறை | | |
| | | | 175, 176,177 | குடியிருப்பு அல்லாத மனைப்பிரிவிற்கு காலி நிலத்தை தெருக்களாகவும் வீட்டு மனைகளாகவும் பிரித்து (Layout) அங்கீகாரம் பெற | ஒரு ஹெக்டேர் அதன் பாகத்திற்கும் | 3000 | 10000 | ஒருமுறை | | |
| | | | | | | | | | | |
| | | | | 2)மனைப்பிரிவுகளில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒருமனையைப் பிரிக்க அல்லது மனைகளை இணைக்க மற்றும் மனை உட்பிரிவு செய்ய | --- | 1000 | 1500 | ஒருமுறை | | |
| | | | 181 | சாலையை நோக்கி வாசல்களில் இருக்கக்கூடிய வெளிப்பக்கமாக திறக்கக்கூடிய கதவுகள்<br>அ) குடியிருப்பு வீடுகளுக்கு<br>ஆ) குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு | <br><br><br>ஒவ்வொரு கதவுக்கும்<br>ஒவ்வொரு கதவுக்கும் | <br><br><br>50<br>100 | <br><br><br>100<br>200 | <br><br><br>நிதி ஆண்டு<br>நிதி ஆண்டு | | |
| | | | 183(1) | வராந்தா, பால்கனி, வேனல்தட்டி, தூவானத்தட்டி, ஆர்.சி.சி.சன்சேடு போன்ற ஆட்சேபனை இல்லாத ஆக்கிரமிப்புகள் (முன் கால் இல்லாமல்) | ஒரு சதுர மீட்டர் அதன் பாகம் | 50 | 100 | நிதி ஆண்டு | | |
| | | | 183(2) | 1)பொதுத்தெருக்களில் கட்டிடங்களுக்கும் போக வசதியாக போடப்பட்டுள்ள படிகள் | ஒரு சதுர மீட்டர் அதன் பாகம் | 50 | 100 | நிதி ஆண்டு | | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அல்லது கட்டிடங்கள் முன்பு போடப்பட்டுள்ள திண்ணை இதைப்போன்ற ஆட்சேபனை இல்லாத ஆக்கிரமிப்புகள் | | | | | | |
| | | | | அ)ஆக்கிரமிப்பு தெரு, நிலத்தில் நீண்டுள்ள திண்ணை வராந்தா | ஒரு சதர மீட்டர் அதன் பாகம் | 50 | 100 | நிதி ஆண்டு | | |
| | | | | ஆ)படிகள் | ஒரு சதர மீட்டர் அதன் பாகம் | 50 | 100 | நிதி ஆண்டு | | |
| | | | | இ) சாக்கடை முடி | ஒரு சதர மீட்டர் அதன் பாகம் | 50 | 100 | நிதி ஆண்டு | | |
| | | | | 2) பொதுத்தெருக்களிலும் நகராட்சி ஆளுகையிலுள்ள பொது இடங்களிலும் தற்காலிக ஆக்கிரமிப்புகள் | ஒரு சதர மீட்டர் அதன் பாகம் | 50 | 100 | நிதி ஆண்டு | | |
| | | | | அ)வீட்டு விழாக்களிலும், வியாபார நோக்கு இல்லாத இதர விழாக்களிலும் பந்தல் போடுவதற்கு | ஒரு சதுர மீட்டர் அதன் பாகம் | 50 | 100 | நாள் ஒன்று | | |
| | | | | ஆ) வியாபார நோக்குடன் கூடிய ஆக்கிரமிப்புகள் பந்தல் போடுவதற்கு | ஒரு சதுர மீட்டர் அதன் பாகம் | 50 | 100 | நாள் ஒன்று | | |
| | | | | இ)கோடை கால பந்தல்கள் (போக்குவரத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் கால்கள் இல்லாமல்) | | 1 ச.மீக்கும் அதன் பாகத் திற்கும் | 30 | (மார்ச் முதல் ஜுலை வரை) | | |
| | | | | ஈ)மத சம்பந்தமான திருவிழா காலங்களில் கோவில் முன்பு பந்தல் போடுவதற்கும். | இலவசம் முன் அனுமதி பெற வேண்டும் | 0 | 0 | 0 | | |
| | | | | 2)நிழல்தட்டிகள்<br>அ) தரைத்தட்டி | ஒருசதுர மீட்டர் அதன் பாகம் | 50 | 100 | நிதி ஆண்டு | | |
| | | | | ஆ) கிடுகுத்தட்டி | ஒருசதுர மீட்டர் அதன் பாகம் | 50 | 100 | நிதி ஆண்டு | | |
| | | | | ஊ)சாலையோரங்களில் வைக்கும் பெட்டிக்கடைகள் கிடுகு செட்டுகள் தகரக்கொட்டகைகள் | ஒருசதுர மீட்டர் அதன் பாகம் | 100 | 200 | நிதி ஆண்டு | | |
| | | | | நகராட்சி எல்லைக்குள் நிறுவப்படும் கைபேசி ஊநடட ஞாடிநே) கோபுரங்கள் அமைத்துக் கொள்ள | 1 எண்ணம் | 5000 | 5000 | ஒருமுறை | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | சினிமா சூட்டிங் எடுக்க | நகராட்சி சாலைகள் தெருக்கள் பொது இடங்கள், அரசு இடங்கள் | –– | 3000 | நாள் ஒன்றுக்கு | |
| | | | | விளம்பர சூட்டிங் சின்னத்திரை சூட்டிங் எடுக்க | நகராட்சி சாலைகள் தெருக்கள் பொது இடங்கள், அரசு இடங்கள் | –– | 1500 | நாள் ஒன்றுக்கு | |
| | | | | பொதுமக்கள் கூடும் களியாட்டங்கள் கண்காட்சி, சர்க்கஸ் பொருட்காட்சி நடக்கும் இடங்களுடகு அனுமதி வழங்கவும், தேர்தல் காலங்களில் நகராட்சி இடங்களில் பந்தல் போடுவதற்கும் | ஒவ்வொரு 10 ச.மீட்டருக்கு | ஒரு மாதத்திற்கும் அதன் பாகத்திற்கும் | 200 | –– | |
| | | | | மழைநீர் சேகரிப்புக் அமைக்க வைப்புத்தொகை | –– | –– | 2000 | ஒருமுறை | |
| | | | | டவுண் சர்வே வரைபட நகல் ஒரு சர்வே எண்ணுக்கு | –– | –– | 200 | ஒருமுறை | |
| | | | | டவுண் சர்வே நிலப்பதிவேடு நகல் ஒரு சர்வே எண்ணுக்கு | –– | –– | 200 | ஒருமுறை | |
| | | | | நான்கு மால் அளவீடு செய்ய ஒரு சர்வே எண்ணுக்கு | –– | –– | 500 | ஒருமுறை | |
| | | | | நில உபயோக சான்று வழங்க | –– | –– | 1000 | ஒருமுறை | |
| | | | | திருத்தக்கட்டுமானம் கூரை மாற்றம் செய்ய சில்லரை வேலைகள் செய்ய | 10 ச.மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | குடியிருப்பு கட்டிடங்கள் | 200 | ஒருமுறை | |
| | | | | | | குடியிருப்பு கட்டிடங்கள் அல்லாத கட்டிடங்களுக்கு | 400 | ஒருமுறை | |
| | 294 | பொருள் – 17<br>அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 04–02–2019 ன்படி | | | | | | | அங்கீகரிக்கப்பட்டது |

ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 ன்படி மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி பகுதிகள் ஆகிய அனைத்திற்கும் ஒரே மாதிரியாக விதிகள் பின்பற்றப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் கட்டிட விதிகள் இயற்றப்பட்டுள்ளது. அதன்படி விருதுநகர் நகராட்சியில் புதிய கட்டிட விதிகள் நடைமுறைப்படுத்தும் பொருட்டு, பொதுமக்கள் கட்டிட அனுமதி பெறும் பொருட்டு இந்நகராட்சிப்பகுதியில் நகர் ஊரமைப்பு துறை மற்றும் குடிசைமாற்று வாரியத்தின் மூலம் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட வறியோர் வாழும் பகுதி (Poor Class area (or) Economical weaker section) மற்றும் அங்கீகரிக்கப்பட்ட குடிசைப்பகுதி (Notified slum Area) ஆகியன கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளது.

**அ)** அங்கீகரிக்கப்பட்ட காமராஜர் பைபாஸ் ரோடு திட்டத்தின்படியும் திட்ட வரைபடத்தின்படியும் ஏற்கனவே வறியோர் வாழும் பகுதியாக அறிவிக்கப்பட்ட பகுதிகள் (Poor Class area (or) Economical weaker section)

1. A1, B1, C1, D1 என எல்கையிட்ட பகுதிகள்.
2. A, B, C, D,E, F, என எல்கையிட்ட பகுதிகள்.
3. E1, F1, G1, H1, J1, K1, L1, M1, N1, என எல்கையிட்ட பகுதிகள்
4. A2Continuous,B2, C2, D2, E2, F2, G2 என எல்கையிட்ட பகுதிகள்
5. O,P,Q, R, S, T, U, V என எல்கையிட்ட பகுதிகள்
6. வரையறுக்கப்பட்ட வறியோர் வாழும் பகுதி என TP/DTP No.12/68 ன்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பகுதி.
7. வரையறுக்கப்பட்ட வறியோர் வாழும் பகுதி என DDP(MR) No.1/77 ன்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பகுதி.
8. வரையறுக்கப்பட்ட வறியோர் வாழும் பகுதி என DDP(M.R) No.1/80

மேலே கண்ட வறியோர் வாழும் பகுதி அடங்கிய சர்வே எண்கள் இணைப்பில் கண்டுள்ளபடி.

**ஆ)** **அங்கீகரிக்கப்பட்ட ட்ரங்க் பைபாஸ் ரோடு விரிவு அபிவிருத்தி திட்டம்**

| | |
|---|---|
| தென்வடல் புல்லலக்கோட்டை ரோடு மேல்புறம் நகராட்சி எல்லைக்கு கீழ்புறம் | இந்த எல்லைக்குள் அமையும் குடியிருப்புகள் அடங்கிய வறியோர் வாழும் பகுதி (EWS). |

| | |
|---|---|
| பைபாஸ் ரோட்டிற்கு தென்புறம் B B சாலை வடபுறம் இதற்குள் அமையும் நகரளவு எண்கள் (பரங்கிநாதபுரம் பகுதி பெரியார்பாளையம் அருகில்) | இந்த வறியோர் வாழும் பகுதியில் அடங்கிய சர்வே எண்கள் இணைப்பில் கண்டுள்ளபடி |

**<u>அங்கீகரிக்கப்பட்ட குடிசை பகுதிகள்</u>**

1) பெரியார்பாளையம்
2) இந்திராநகர்
3) ஏ.டிபி.காம்பவுண்ட்
4) பர்மா காலனி
5) அன்னைசிவகாமிபுரம் தெரு
6) பாத்திமா நகர்
7) சிவந்திபுரம் காட்டுத் தெரு
8) மணிநகரம்
9) கம்மாபட்டி
10) டாக்டர் அம்பேத்கார் தெரு
11) இளங்கோவன் தெரு
12) நேருஜி நகர்

மேற்படி அங்கீகரிக்கப்பட்ட குடிசைப் பகுதிகள் அடங்கிய சர்வே எண்கள் இணைப்பில் கண்டுள்ள படி

**அலுவலகக்குறிப்பு :** மேலே பொருளில் கண்டுள்ள

1) வறியோர் வாழும் பகுதியில் உள்ள இடங்கள்
2) அங்கீகரிக்கப்பட்ட குடிசைப்பகுதிகள் அமையும் இடங்கள் அடங்கிய சர்வே எண்களிலும், மேற்படி தெருக்களிலும்,

மேற்கண்ட இடங்களில் அமையும் அனைத்து பகுதிகளிலும், ஒருங்கிணைந்த அபிவிருத்தி கட்டிட விதிகள் 2019ன் படி இந்நகராட்சியே பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி திட்ட, கட்டிட அனுமதி மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| | 295 | **பொருள் – 18**<br>அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 04–02–2019 ன்படி ஒருங்கிணைந்த அபிவிருத்தி கட்டிட விதிகள் 2019 ன்படி மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி பகுதிகள் ஆகிய அனைத்திற்கும் ஒரே மாதிரியாக விதிகள் பின்பற்றப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் கட்டிட விதிகள் இயற்றப்பட்டுள்ளது. அதன்படி விருதுநகர் நகராட்சியில் புதிய கட்டிட விதிகள் நடைமுறைப்படுத்தும் பொருட்டு, தொடர்ச்சியாக கட்டிடங்கள் அமையும் பகுதி (continuous Built up area CBA) ஆகியன கண்டறிந்து மன்ற ஒப்புதல் பெற்று நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் ஒப்புதல் பெற அனுப்ப வேண்டியுள்ளதால், பொதுமக்கள் கட்டிட அனுமதி பெறும் பொருட்டு இந்நகராட்சிப்பகுதியில் உள்ள கீழ்க்கண்ட பகுதிகள் தொடர்ச்சியாக கட்டிடங்கள் அமையும் பகுதி (continuous Built up Area ) மற்றும் (Un-notified Slum Area) அங்கீகரிக்கப்படாத குடிசைப்பகுதி ஆகியன அறிவிப்பு செய்ய கீழ்க்கண்ட படி கண்டறியப்பட்டு மன்ற பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>**அ) <u>காமராஜர் பைபாஸ் ரோடு விரிவு அபிவிருத்தி திட்டத்தின்படி (CBA)</u>**<br>இரயில்வே எல்லை மற்றும் கௌசிகா ஆற்றிற்கு கிழக்கு, காமராஜ் பைபாஸ் ரோட (60’) க்கு தெற்கு நகராட்சி எல்லைக்கு வடக்கு, மாத்துநாயக்கன்பட்டி பாதைக்கு மேற்கு பகுதியில் உள்ள இடங்கள் இதற்குள் அமையும் சர்வே எண்கள் இணைப்பில் கண்டுள்ளபடி. (சிவந்திபுரம் ஆத்துமேடு பகுதி முழுவதும்)<br><br>**<u>தொடர் கட்டுமான பகுதிகள், (Continuous building Area)</u>**<br>I. அருப்புக்கோட்டை ரோடு (கீழ்புறம் மேம்பாலம் முடியும் இடத்தின் தென்புறம் நோக்கி செல்லும் சாலையில் மேல்புறம், குல்லூர் சந்தை ரோடு பிரதான சாலை வடபுறமும், கீழ்புறமும், E3 E3 சாலையில் இருந்து வடபுறம் 100’ தூரம் வரை, (சப்பாணி தெரு, அருப்புக்கோட்டை ரோடு பகுதி, குல்லூர் சந்தை ரோடு) இதற்குள் அமையும் சர்வே எண்கள் இணைப்பில் கண்டுள்ளபடி.<br>II. குல்லூர் சந்தை ரோட்டிற்கு தென்புறம், சிவந்திபுரம், தெரு, பிரதான சாலை கீழ்புறம் வரையறை செய்யப்பட்ட E1 to N1 வறியோர் வாழும் பழுதிக்கு வடபுறம் இதற்குள் அமையும் சர்வே எண்கள் இணைப்பில் கண்டுள்ளபடி. (சிவந்திபுரம் 1 வது தெரு, 2வது தெரு, குல்லூர் சந்தை ரோடு பகுதி) | அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | III. காமராஜர் பைபாஸ் ரோட்டிற்கு மேற்புறம், T.S.No.57 க்கு தென்புறம், A2 to G2 வரை வரையறுக்கப்பட்ட வறியோர் வாழும் பகுதிக்கு கீழ்புறம், நகராட்சி எல்லைக்கு வடபுறம் (சவுண்டி தெரு, வடக்கு சுந்தரம் தெரு, தெற்கு சுந்தரம் தெரு, இராமன் தெரு, காமராஜர் பைபாஸ் ரோடு பகுதி) இதற்குள் அமையும் சர்வே எண்கள் இணைப்பில் கண்டுள்ளபடி.<br><br>IV. இரயில்வே எல்லைக்கு மேல்புறம் அருப்புக்கோட்டை ரோடு (மேம்பாலத்திற்கு) தென்புறம், A to F வரை வரையறுக்கப்பட்ட வறியோர் வாழும் பகுதிக்கு வடபுறம், அருப்புக்கோட்டை ரோடு மேம்பாலத்திற்கு கீழே தென்புறம் நோக்கி செல்லும் தெருவிற்கு கீழ்புறம் இதற்குள் அமையும் சர்வே எண்கள் (ஆவலப்பசாமி தெரு, அருப்புக்கோட்டை ரோடு பகுதி) இணைப்பில் கண்டுள்ளபடி.<br><br>V. அருப்புக்கோட்டை ரோடு மேம்பாலத்திற்கு கீழே தென்புறம் நோக்கி செல்லும் ஆவலப்பசாமி கோவில் தெருவிற்கு மேல்புறம் A1 to D1 வரை வரையறுக்கப்பட்ட வறியோர் வாழும் பகுதி என உள்ளதால் அதை தவிர்த்து ஆவலப்பசாமி கோவில் தெரு பிரதான சாலைக்கு வடபுறம், பிரதான ஓடை கீழ்புறம் இதற்குள் அமையும் சர்வே எண்கள் இணைப்பில் கண்டுள்ளபடி.<br><br>VI. இரயில்வே எல்லைக்கு மேல்புறம், காமராஜர் பைபாஸ் ரோடு (60’) க்கு வடபுறம், ஆவலப்பசாமி கோவில் தெருவிற்கு கீழ்புறம், A, to F வரையறுக்கப்பட்ட வறியோர் வாழும் பகுதிக்கு தென்புறம் இதற்குள் அமையும் சர்வே எண்கள் (அய்யம்பெருமாள் தெரு, ஆவலப்பசாமி கோவில் தெரு பகுதி, காமராஜர் பைபாஸ் ரோடு பகுதி) இணைப்பில் கண்டுள்ளபடி.<br><br>VII. நகராட்சி எல்லைக்கு மேல்புறம், நகராட்சி எல்லைக்கு வடபுறம், அருப்புக்கோட்டை ரோட்டில் இருந்து தென்புறம் நோக்கி செல்லும் காமரார் பைபாஸ் ரோட்டிற்கு கீழ்புறம், அருப்புக்கோட்டை ரோட்டிற்கு தென்புறம் இதற்குள் அமையும் சர்வே எண்கள் இணைப்பில் கண்டுள்ளபடி .<br><br>VIII. காமராஜர் பைபாஸ் ரோடு (60’) க்கு வடபுறம், வரையறுக்கப்பட்ட வறியோர் வாழும் பகுதி DDP(M.D) N.1/80க்கு கீழ்புறம் N1 to K1 என குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட வறியோர் வாழும் பகுதிக்கு மேல்புறம், M1 to L1 என எண்ணிடப்பட்டு வரையறுக்கப்பபட்ட வறியோர் பகுதிக்கு தென்புறம் இதற்குள் அமையும் சர்வே எண்கள் (பவுண்டு தெரு, காமராஜர் பைபாஸ் ரோடு பகுதி) இணைப்பில் கண்டுள்ளபடி. | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | IX. காமராஜர் பைபாஸ் ரோடு (60') சாலையில் இருந்து தெற்கு நோக்கி செல்லும் மாத்தநாயக்கன்பட்டி பாதைக்கு கீழ்புறம், காமராஜர் பைபாஸ் ரோட்டிற்கு தென்புறம், நகராட்சி எல்லைக்கு மேல்புறம் மற்றும் வடபுறம் இதற்குள் அமையும் சர்வே எண்கள் (மாத்தநாயக்கன்பட்டி பாதை பழுதி, காமராஜர் பைபாஸ் ரோடு பகுதி) இணைப்பில் கண்டுள்ளபடி.<br><br>**<u>அங்கீகரிக்கப்பட்ட ட்ரங்க் பைபாஸ் ரோடு விரிவு அபிவித்தி திட்டம்</u>** | |

| | |
|---|---|
| B B சாலை தென்புறம் டெலிபோன் குடியிருப்பிற்கு மேல்புறம் பாவாலி சாலைக்கு கீழ்புறம் கலைவாணர் நகர் குறிப்பிடப்படும் பகுதியின் தென்புற எல்லை வரை இதற்குள் அமையும் நகரளவு எண்கள் (பரங்கிநாதபுரம் கலைவாணர் நகர் பகுதி) இணைப்பில் கண்டுள்ளபடி | தொடர் கட்டுமானங்கள் அமையும் பகுதி (CBA) |
| பிரதான சாலையின் கீழ்புறம் பாவாலி சாலையின் மேல்புறம் நகராட்சி எல்லைக்குள் தென்புறம் மின்வாரிய அலுவலகத்திற்கு வடபுறம் (அகமது நகர் பகுதிகளில் அமையும் நகரளவு எண்கள்) இணைப்பில் கண்டுள்ளபடி | தொடர்கட்டுமானங்கள் அமையும் பகுதி (CBA) |
| B2 B2 சாலைக்கு தென்புறம் பாவாலி சாலைக்கு கீழ்புறம் புல்லலக்கோட்டை சாலைக்கு மேல்புறம் கிழமேல் செல்லும் பாவாலி சாலைக்கு வடபுறம் உள்ள பகுதிகளில் அமையும் நகரளவு எண்கள் (பாரதிநக்ர் பகுதியிடங்கள்) இணைப்பில் கண்டுள்ளபடி | தொடர்கட்டுமானங்கள் அமையும் பகுதி (CBA) |
| புல்லலக்கோட்டை சாலைக்கு கீழ்புறம் இந்திரா நகர் பகுதிக்கு தென்புறம் மாமிஸ்மசாலா இடத்திற்கு வடபுறம் கச்சேரி சாலையில் இருந்து 500 மீ தாண்டி மேல்புறம் அமையும் பகுதிகளில் உள்ள குடியிருப்பு இனங்களுக்குரிய சர்வேஎண்கள் (நேருஜிநகர் , SSSM நகர் பகுதி) இணைப்பில் கண்டுள்ளபடி | |

| | |
|---|---|
| பிரதான ஓடைக்கு (EB அருகில்) தென்புறம் நகராட்சி எல்லைக்கு கீழ்புறம் நகராட்சி நடுநிலைப்பள்ளிக்கு மேல்புறம் ஹாஜி.பி.பள்ளி மைதானத்திற்கு வடபுறம் உள்ள பகுதிகளில் அமையும் சர்வே எண்கள் (பர்மா காலனி பகுதி) இணைப்பில் கண்டுள்ளபடி. | தொடர்கட்டுமானங்கள் அமையும் பகுதி (CBA) |
| கிருஷ்ணமாச்சாரி சாலைக்கு தென்புறம் நகராட்சி எல்லைக்கு கீழ்புறம் சாத்துார் சாலைக்கு மேற்புறம் நகராட்சி எல்லைக்கு வடபுறம் பகுதிக்குள் அமையும் சர்வே எண்கள் (பாத்திமா நகர் பகுதி) இணைப்பில் கண்டுள்ளபடி. | தொடர்கட்டுமானங்கள் அமையும் பகுதி (CBA) |
| ஹாஜி.பி.பள்ளி மைதானத்திற்கு தென்புறம் நகராட்சி டோபிகானா இடத்திற்கு வடபுறம் கிருஷ்ணமாச்சாரி சாலைக்கு மேல்புறம் நகராட்சி எல்லைக்கு கீழ்புறம் பகுதிகளுக்குள் அமையும் சர்வே எண்கள் (அன்னை சிவகாமிபுரம் பகுதி) இணைப்பில் கண்டுள்ளபடி. | தொடர்கட்டுமானங்கள் அமையும் பகுதி (CBA) |

**<u>அங்கீகரிக்கப்பட்ட எம்.எஸ்.பி.நகர் விரிவு அபிவிருத்தி திட்டம்</u>**

LIG காலனி முழுவதும் (சர்வே எண்கள் இணைப்பில் கண்டுள்ளபடி)

LIG காலனி அமையும் சர்வே எண்கள் இணைப்பில் கண்டுள்ளபடி தொடர்ச்சியாக உள்ள கட்டுமானப்பகுதி என அறிவிப்பு செய்யலாம் (CBA) (Continuous Built up Area)

**<u>அங்கீகரிக்கப்பட்ட கத்தாளம்பட்டி நகரமைப்புத்திட்டம்</u>**

இராமமூர்த்தி ரோடு தென்புறம்

ASSSS ரோடு மேற்புறம்

K4 K4 ரோடு வடபுறம்

சத்தியமூர்த்தி ரோடு கீழ்புறம் அடங்கிய சர்வே எண்கள் இணைப்பில் கண்டுள்ளபடி

தொடர்ச்சியாக உள்ள கட்டுமானப்பகுதி என அறிவிப்பு செய்யலாம் (Continuous Built up Area)

**<u>கத்தாளம்பட்டி பகுதி</u>**

லிங்க் ரோட்டிற்கு வடபுறம்
ASSSS ரோடு மேற்புறம்
சத்தியமூர்த்தி ரோடு கீழ்புறம்

H H சாலையில் எதிர்புறம் உள்ள சாலையின் தென்புறம் அடங்கிய சர்வே எண்கள் இணைப்பில் கண்டுள்ளபடி தொடர்ச்சியாக உள்ள கட்டுமானப்பகுதி என அறிவிப்பு செய்யலாம் (Continuous Built up Area)

**ஆ) <u>திட்டமில்லா பகுதியில் கண்டறியப்பட்டுள்ள தொடர் கட்டுமான பகுதி அமையும் இடங்கள்</u>**

கிழமேல் இராமமூர்த்தி சாலைக்கு தென்புறம்
இரயில்வே லைனிற்கு மேல்புறம்
அருப்புக்கோட்டை சாலைக்கு வடபுறம்
இரயில்வே பீடர் ரோடு, கச்சேரி ரோடு, பஜார் தெரு சந்திப்பு, முனிசிபல் ஆபீஸ் ரோடு ஆகியவற்றிற்கு கீழ்புறம் பகுதிகளில் அமையும் அனைத்து சர்வே எண்கள் இணைப்பில் கண்டுள்ளபடி.

இராமூர்த்தி சாலை, வீராச்சாமி தெரு, சாமியார் கிணற்று தெரு, பாரதியார் தெரு,முத்துச்சாமி தெரு, குருசாமி கொத்தன் தெரு, ஏ.சி.சங்கரலிங்கம் தெரு, ஏ.பி.சண்முகம் தெரு, சாமியார் நாகப்பன் தெரு, சக்கப்பன் தெரு, முத்து தெரு, கோபால் தெரு, நக்கீரர் தெரு, ராமச்சந்திரன் தெரு, செ.மீ.பெண்பாடசாலை தெரு, சின்னப்பள்ளிவாசல் தெரு, அல்லிதெரு, இரயில்வே பீடர் ரோடு, அழகர்சாமி தெரு, சுப்பா தெரு, கட்டபொம்மன் தெரு, காந்திபுரம் தெரு, கச்சேரி ரோடு பகுதி,மாரியப்பன் கோவில் தெரு, இரயில்வேபீடர் பகுதி சந்தியம்மன்கோவில் தெரு, விவேகானந்தர் தெரு, சாயக்காரர் தெரு, கூந்தப்பனை தெரு, காசுக்கடை தெரு, பஜார் தெரு, உள் தெரு, கீழக்கப்டைத் தெரு, சாமியண்ணன் பிள்ளையார்கோவில் தெரு, தெப்பம் கிழக்கு பஜார், தெப்பம் வடக்கு பஜார்.

SVPNS சிதம்பரம் தெரு, எல்.பி.சண்முகம் தெரு, கே.பி.பெரியகருப்பன் தெரு, கமலம்பச்சையப்பன் தெரு, கடலைக்காரர் தெரு, தேவஸ்தான கிட்டங்கி தெரு, கே.இ.எஸ்.கிட்டங்கி தெரு எம்.சி.சிதம்பரம் தெரு, மாலைக்கோவில் தெரு, பி.பி.வையாபுரி தெரு,டி.எம்.பி.கிட்டங்கி தெரு, கசாப்புக்காரர் தெரு, ஆண்டிக்கிணற்று தெரு, காளியம்மன்கோவில் தெரு, எம்.கே.அய்யன் தெரு, டி.சி.கே.பெரியசாமிதெரு சின்னையா பள்ளிக்கூடம் தெரு, சண்முகம் தெரு, டி.சி.கிட்டங்கி தெரு எம்.கே.குருசாமி தெரு, வி.பி.வன்னியன் தெரு, பூலோகன் தெரு, எஸ்.பி.எஸ்.பெரியசாமி தெரு,

| | | | |
|---|---|---|---|
| | | வெள்ளையன் தெரு, எஸ்.முத்தையா தெரு எ.எஸ்.எஸ்.எ.நந்தவனம் தெரு, டி.சி.சோனை கருப்பன் தெரு, சோனையன் தெரு, பி.பி.வையாபுரி நந்தவனம் தெரு, அருப்புக்கோட்டை ரோடு பகுதி, செந்திவிநாயகபுரம் தெரு, சுந்தரம் தெரு, காமாட்சி தெரு, ஆணிமுத்துபிள்ளையார் கோவில் தெரு, தாளையப்பன் தெரு, வள்ளிக்குட்டி தெரு, அக்ரஹாரம் தெரு<br>மேற்கண்ட தெருக்களில் அமையும் அனைத்து சர்வே எண்கள் இணைப்பில் கண்டுள்ளபடி.<br>முனிசிபல் ஆபீஸ் ரோடு ரோமன் கோவில் தெரு, அருளப்பன் தெரு, நாராயணமடம் தெரு, இன்னாசி தெரு, இடும்பன் நீராவி தெரு, இடும்பவனம் தெரு<br>மேற்கண்ட தெருக்களில் அமையும் சர்வே எண்கள் இணைப்பில் கண்டுள்ளபடி<br>கிழமேல் பாவாலி சாலை, வடக்குரதவீதிக்கு தென்புறம் பஜார் தெரு, தெப்பம் மேற்கு பஜார் முனிசிபல் ஆபீஸ் ரோடு மேல்புறம் தென்வடல் கிருஷ்ணமாச்சாரி சாலைக்கு கிழக்கு கிழமேல் கிருஷ்ணமாச்சாரி சாலைக்கு வடபுறம், தெற்குரதவீதி, பெரியகிணற்று தெரு, கொல்லர் தெரு, சுலோச்சனா தெரு, பஜார் தெரு, சந்திக்கூடம் தெரு,<br>பூக்கடை சந்து, பெ.சி.சிதம்பரம் தெரு, மேலரதவீதி, எஸ்.எம்.கிட்டங்கி தெரு, பஜார் தெரு, பழக்கடைத்தெரு, வில்காரன் கோவில் தெரு, சேக்கிழார் தெரு , வெள்ளைய்ன் தெரு, நாச்சி தெரு, வைத்தியன் பொன்னப்பன் தெரு, சடையாண்டி தெரு, போஸ்ட்ஆபீஸ் தெரு சண்முகம் தெரு, பஜனைமடம் தெரு, குமரன் தெரு<br>மொன்னி தெரு<br>பாவாலி ரோடு, கல்பள்ளிவாசல் தெரு, கிருஷ்ணமாச்சாரி ரோடு பகுதி சீதக்காதி தெரு, நீர்மாலை தெரு பாரப்பட்டி தெரு, பெரியபள்ளிவாசல் தெரு, மேலரதவீதி, அப்துல்லா சந்து, சிதம்பரனார் தெரு<br>வேலு சந்து, எஸ்.எ.அண்ணாமலை தெரு, பெருமாள்கோவில் தெரு,<br>ஓடை தெரு<br>வாழவந்தான் சந்து, மேலரதவீதி, மாரிமுத்து சந்து, சின்னரங்கன் சந்து, ராமசாமி தெரு, சிவன்கோவில தெரு, பூசாரி சந்து, ஆண்டிச்சியம்மன்கோவில் தெரு, குப்பையாசந்து, சண்முகம் சந்து. பிள்ளையார்கோவில் தெரு, ஔவையார் தெரு, பிச்சாண்டி தெரு, கூளையன்கோவில் தெரு, குருநாதன்கோவில் தெரு, பஜார் தெரு, மரக்கடைத் தெரு, பேட்டை தெரு, முத்துவேல் தெரு, சந்தை பேட்டை தெரு, நாராயணசாமிகோவில் தெரு, வேலு தெரு, புதுஅம்மன்கோவில் தெரு<br>மேற்கண்ட தெருக்களில் பைபாஸ் ரோடு, கிழக்கு பாண்டியன் காலனி, மேற்குபாண்டியன் | |

| | | | |
|---|---|---|---|
| | | காலனி அமையும் சர்வே எண்கள் இணைப்பில் கண்டுள்ள படி<br><br>**இ) <u>அங்கீகரிக்கப்படாத குடிசை பகுதிகள்</u>**<br><br>1) பரங்கிநாதபுரம்<br>2) துப்புரவு பணியாளர் குடியிருப்பு<br>3) பெருமாள்கோவில் தெரு<br>4) முனிசிபல் ஆபீஸ் ரோடு<br>5) கொப்பன் தெரு & பெருமாள் தெரு<br>6) சவுண்டித்தெரு<br>7) மாத்துநாயக்கன்பட்டி பாதை<br>8) குல்லூர்சந்தை ரோடு<br>9) ரோாசல்பட்டி ரோடு<br>10) காந்திபுரம் தெரு<br>11) கட்டையாபுரம்<br>12) விஸ்வநாதாஸ் காலனி<br>மேற்படி அங்கீகரிக்கப்படாத குடிசைப் பகுதிகள் அடங்கிய சர்வே எண்கள் இணைப்பில் கண்டுள்ள படி<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>மேலே பொருளில் கண்டுள்ள தொடர் கட்டுமானப் பகுதி என கண்டறியப்பட்ட இடங்கள் அடங்கிய சர்வே எண்களில் மற்றும் அங்கீகரிக்கப்படாத குடிசைப்பகுதிகள் அமையும் இடங்கள் அடங்கிய சர்வே எண்களில், ஒருங்கிணைந்த அபிவிருத்தி கட்டிட விதிகள் 2019 ன்படி திட்ட, கட்டிட அனுமதி வழங்க ஏதுவாக பொருளில் கண்டுள்ள இடங்களை, தொடர்ச்சியாக கட்டிடங்கள் அமைந்துள்ள பகுதி மற்றும் அங்கீகரிக்கப்படாத குடிசைப்பகுதி என அறிவிப்பு செய்ய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் ஒப்புதல் பெற்று திட்ட, கட்டிட அனுமதி வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| | 296 | **பொருள் – 19**<br>அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019, தமிழ்நாடு அரசிதழ் | அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | எண்.43 பகுதி-III பிரிவு 1(9), நாள்.04.02.2019 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 50977/2019/டிபி3, நாள்.07.03.2019ன்படி விருதுநகர் நகராட்சி பகுதியில் தொழில் சார்ந்த வல்லுநர்கள் (RE, RA, RCE, RSE, RQA, RGTE, RTP, RLA, RD) பதிவு செய்ய பரிசீலனைக் குழு (Screening Committee) ஒன்று கீழ்க்கண்ட அலுவலர்களை<br>**<u>விருதுநகர் நகராட்சி</u>**<br>(உறுப்பினர்கள் – உறுப்பினர்களின் எண்ணிக்கை)<br>1. நகராட்சி ஆணையாளர் - 1<br>2. நகரமைப்பு அலுவலர் - 1<br>3. நகரமைப்பு ஆய்வாளர் - 1<br>உறுப்பினர்களாக அமைத்து, பதிவு செய்யக்கோரும் தொழில் சார்ந்த வல்லுநர்களான தகுதி, பதிவு செய்யும் வழிமுறை அவர்களின் பணிகள் பொறுப்புகள் குறித்து பரிசீலனை செய்து, தொழில் சார்ந்த வல்லுநர்கள் பதிவு செய்ய குழு அமைக்க மன்றத்தின் ஒப்பதலுக்கு.<br>அலுவலக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 977/2019/எப்2 | |
| | 297 | **பொருள் – 20**<br>நகராட்சி எல்லைக்குட்பட்ட மத்திய மாநில அரசுகள் நகராட்சி மற்றும் தனியார்களுக்கு பாத்தியப்பட்ட கட்டிடங்கள் மற்றும் நிலப்பகுதிகளில் வைக்கப்படும் விளம்பரப் பலகை, விளம்பரப்பலகை அல்லாத விளம்பரங்கள் (தட்டிகள், பேனர்கள், சுவர் விளம்பரங்கள்) ஆகியவற்றிற்கு கீழ்க்கண்ட விபரப்படி விளம்பரப் பலகைகள் அனுமதி விளம்பரவரி விதித்தல் மற்றும் வசூலித்தல் விதிகள் 2003, பிரிவு 14(1), 14(2) அரசு ஆணை எண்.47 (தேர்தல்) நகராட்சி நிர்ணயம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.06.2003, தமிழ்நாடு அரசிதழ் எண்.184, பாகம் எண் III பிரிவு எண் 1(a) நாள்.26.06.2003-ல் G.O.No.16MAWS 31.01.2019 & தமிழ்நாடு அரசிதழ் எண்.39 III பிரிவு /எண்(a) நாள்.31.01.2019-ல் அரசு கீழ்க்கண்ட விபரப்படி, நகரில் உள்ள முக்கிய இடங்கள், முக்கிய சாலைகள், தெருக்கள், இதரப்பகுதிகள் ஆகிய இடங்களில் அமையும் விளம்பரத்திற்கு தக்கவாறும், இடத்திற்கு தக்கவாறும், அளவுகளுக்கு தக்கவாறும், அந்த விளம்பரப்பலகை அமையும் சாலையின் அகலத்திற்கு தக்கவாறும் வைக்கப்படும் விளம்பரப்பலகைகள் மற்றும் விளம்பரப்பலகை அல்லாத விளம்பரங்களளுக்கு (தட்டிகள், பேனர்கள், சுவர் விளம்பரங்கள்) விண்ணப்பக் கட்டணம், வருட நில வாடகை மற்றும் உரிமையாணைக்கட்டணம் ஆகியன அரசு தெரிவித்துள்ள கட்டணங்களின் அடிப்படையில் நிர்ணயம் செய்ய நகர் மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>விருதுநகர் நகரினை பொறுத்தமட்டில் விளம்பரப்பலகை அல்லாத விளம்பரங்களுக்கு அனைத்து</u>** | அங்கீகரிக்கப்பட்டது |

Inner table (விருதுநகர் நகராட்சி):

| | **<u>உறுப்பினர்கள்</u>** | | **<u>உறுப்பினர்களின் எண்ணிக்கை</u>** |
|---|---|---|---|
| 1. | நகராட்சி ஆணையாளர் | - | 1 |
| 2. | நகரமைப்பு அலுவலர் | - | 1 |
| 3. | நகரமைப்பு ஆய்வாளர் | - | 1 |

| | | | |
|---|---|---|---|
| | | **பகுதிகளுக்கும்**<br>தட்டிகள்/பேனர்கள்/ சுவர் விளம்பரங்கள் ஆகியவற்றில் செய்யும் விளம்பரங்களுக்கு விளம்பரப்பலகை அல்லாத விளம்பரங்களுக்கு உரிமையாணைக் கட்டணம் 1 ச.மீக்கு = ரூ.80/ 1 ஆண்டுக்கு<br>விண்ணப்பக் கட்டணம் = 1 எண்ணத்திற்கு = ரூ.1000/-<br>விளம்பரப்பலகை அமைக்க உரிமக்கட்டணம் மேற்கண்ட விதிகள் 2003 விரிவு 13ன்கீழ் இந்நகரத்திலுள்ள சாலைகள், இடங்கள் ஆகியவற்றில் அமையும் விளம்பரத்தின் தன்மைக்கு ஏற்றவாறு உரிமையாணைக்கட்டணம் 3 ஆண்டுக்கு நிர்ணயம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.<br>**விருதுநகரினை பொறுத்த மட்டில்**<br><br>**A) நகரில் உள்ள பேருந்துகள் செல்லும் பிரதானச்சாலைகள்(விதி எண் 13ன்படி)**<br>i)<br><br>i) கிருஷ்ணமாச்சாரி ரோடு<br>ii) அருப்புக்கோட்டை ரோடு<br>iii) இராமமூர்த்தி ரோடு<br>iv) பைபாஸ் ரோடு<br>v) கச்சேரி ரோடு<br>vi) பாவாலி ரோடு<br>vii) புல்லலக்கோட்டை ரோடு<br>viii) புறுகானூரணி ரோடு<br>**ii) நகராட்சி பேருந்து நிலையங்கள்**<br>நகராட்சி பூங்கா<br>நகராட்சி, மத்திய மாநில அரசுக்கு சொந்தமான இதர காலியிடங்கள்<br>மேற்கண்ட சாலைகள் மற்றும் இடங்களில் செய்யப்படும் கீழ்க்கண்ட விளம்பரப்பலகைகளின் தன்மைக்கு ஏற்றவாறு நிர்ணயம் செய்ய வேண்டிய விளம்பர உரிமையாணைக் கட்டணங்கள்<br>விண்ணப்பக் கட்டணம் = 1 எண்ணத்திற்கு = ரூ .1000/-<br>அட்டவணை Bல் உள்ள சாலைகளில் விளம்பரப் பலகை அமைக்க ரூ.6000/- 1.ச.மீக்கு உரிமையாணைக்காலம் 3 வருடங்கள்.<br>**நகரில் உள்ள இதர சாலைகள் மற்றும் தெருக்கள்**<br>அட்டவணை "C" உள்ள சாலைகளில் விளம்பரப்பலகை அமைக்க ரூ.4000/- 1 ச.மீ க்கு | |

உரிமையாணக் காலம் 3 வருடங்கள்.

விருதுநகரில் அமைந்துள்ள B(i),(ii) குறிப்பிட்டுள்ள இனங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள சாலைகள், தெருக்கள் மற்றும காலியிடங்களை தவிர நகரில் உள்ள ஏனைய சாலைகள் தெருக்கள் அனைத்திலும் செய்யப்படும் விளம்பரப்பலகைகளின் தன்மைக்கு ஏற்றவாறு நிர்ணயம் செய்யப்பட வேண்டிய விளம்பர உரிமையாணைக்கட்டணங்கள் விளம்பரப்பலகை அமையும் அளவுகள், ஒவ்வொரு சாலையிலும், ஒரே குறிப்பிட்ட அளவுகளில் மட்டும் தான் அமைக்க வேண்டும்.

4) எந்தவித விளம்பரப்பலகையும் 10 அடி அகலத்திற்கு குறைவான சாலைகள், தெருக்களில் வைப்பதற்கு அனுமதிக்க கூடாது.

5) பாத சாரிகள் உபயோகப்படுத்தவதற்கான தனி நடைபாதை இல்லாத சாலைகளில் பாதசாரிகள் சாலையை உபயோகப்படுத்துவதற்கு ஏதுவாக சாலையில் ஓரத்தில் விளம்பரப்பலகைகள் அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு விளம்பரப்பலகைகளுக்கும் இடையே 5 அடி அகல இடைவெளி விட வேண்டும்.

6) விளம்பரப்பலகைகள் சாலையோரங்களில் நெடுக்கு வசமாக அமைக்க வேண்டும். குறுக்கு வசமாக அமைக்க கூடாது.

7) அனைத்து விளம்பரப்பலகைகளும் இரும்பு பட்டையால் அமைக்கப்படவேண்டும்.

8) அமைக்க உள்ள விளம்பரப்பலகைகளுக்கு தேவைப்படும் இடத்தில் ஸ்திரத்தன்மை சான்று பெறப்பட வேண்டும்.

**அலுவலகக்குறிப்பு:**

I) பொருளில் A பிரிவில் கண்டுள்ளபடி நகராட்சி எல்லைக்குள் உள்ள அனைத்து சாலைகளில் மற்றும் இடங்களில் வைக்கப்படும் விளம்பரப்பலகை அல்லாத விளம்பரங்களுக்கு (திருவிழா, கலை நிகழ்ச்சி, பொதுக்கூட்டம், திருமணம் மற்றும் இதர வைபவங்கள் அரசியல் கட்சி கூட்டம் மற்றும் தேர்தல் தொடர்பான அரசியல் விளம்பரம்) தட்டிகள், பேனர்கள் மற்றும் சுவர்களில் எழுதப்படும் இனங்களுக்கு அனைத்து சாலைகள் மற்றும் தெருக்களுக்கு 1 ச.மீ-க்கு ரூ.80/- என நிர்ணயம் செய்யலாம். மற்றும் விளம்பரப்பலகை அல்லாத விளம்பரங்களில் வணிக நோக்குடன் செய்யக்கூடிய விளம்பரங்களுக்கு தட்டிகள், பேனர்கள் மற்றும் சுவர்களில் எழுதப்படும் இனங்களுக்கு அனைத்து சாலைகள் மற்றும் தெருக்களுக்கு ரூ.100/-1ச.மீக்கு நிர்ணயம் செய்யலாம்.

II) பொருளில் கண்டுள்ள B மற்றும் C அட்டவணையில் கண்டுள்ள இனங்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள கட்டணங்களையே நிர்ணயம் செய்ய தீர்மானிக்கலாம்.

III) மேற்கண்ட கட்டண விபரங்களை தின நாளிதழ் மற்றும் அரசிதழில் பொதுமக்கள் அறியும் வகையில் விளம்பரம் செய்ய ஆகும் செலவுத்தொகைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

அனைத்து வகையான விளம்பரப்பலகைகளுக்கும் உரிமையாணைக்காலம் 3 வருடங்கள்.

அட்டவணை "B" ல் கண்டுள்ள சாலைகளுக்கு 1 ச.மீக்கு ரூ.6000/- எனவும், அட்டவணை "C" ன்படி சாலைகள் மற்றும் இதர தெருக்களுக்கு 1 ச.மீக்கு ரூ.4000/- எனவும் நிர்ணயம் செய்யலாம்.

C) நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம், பூங்கா, சந்தைகள், திருமண மண்டபங்கள், வணிக வளாகங்கள், இதர கட்டிடங்கள் மற்றும் நகராட்சி சாலைகள் மற்றும் நகராட்சி நிலங்கள் ஆகிய நிலப்பகுதிகளில் நிறுவப்படும் விளம்பரங்களுக்கு விளம்பர பலகை அமையும் பரப்பளவிற்கு ஏற்றவாறு ஒரு சதுர மீட்டருக்கு ஒரு வருடத்திற்கு நில வாடகை நிர்ணயம் செய்ய நகர்மன்றத்திற்கு மேற்கண்ட விதிகள் 2003 பிரிவு 7(2)ன் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே நகர்மன்றம் மேற்கண்ட நகராட்சிக்கு சொந்தமான நிலம் மற்றும் சாலைகளில் விளம்பரப்பலகைகள் நிறுவுவதற்கு நில வாடகை ஒரு ச.மீக்கு ஒரு ஆண்டுக்கு ரூ.100/- என நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

நகரில் நிறுவப்படும் விளம்பரப்பலகைகளுக்கு மேற்கண்ட அரசு விதிகள் 2003 மற்றும் 2019ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள்)

| Sl. No | Road width / No. of Lanes | Maximum size of Display | Distance of placement from road junction |
|---|---|---|---|
| 1. | Any road for shops | 3 ft width of shops | Not applicable |
| 2. | 50 feet / 4 lanes | 20 ft x 10 ft | 100mts |
| 3. | 80 feet/ 6 lanes | 30 ft x 15 ft | 100mts |
| 4. | 120 feet (or) more | 40 ft x 20 ft | 100mts |

ந.க.எண். 6579/2015/எப்1

அலுவலக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

---

298

**பொருள் – 21**

விருதுநகர் நகராட்சி சுகாதாரப்பிரிவு வாகனம் T N 67 -1600 TATA ACE வாகனத்திற்கு புதிய ஹட்ராலிக் டிப்பர் போடுவதற்கும், ஆண்டு பராமரிப்பு செய்து தகுதிச்சான்று பெறுவதற்கும், ஓட்டுநர் **05.03.2019**ம் தேதியன்று விண்ணப்பித்துள்ளார். ஆகையால், மேற்க்கண்ட வாகனம் T N 67- 1600

அங்கீகரிக்கப்பட்டது

<table>
<tr><td></td><td></td><td>TATA ACE தகுதிச்சான்று பெறுவதற்கு உத்தேச செலவுத்தொகை ரூ.1,62,000/—க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2073 / 2019 / எச்.1.</td><td></td></tr>
<tr><td></td><td>299</td><td>பொருள் – 22<br>விருதுநகர் நகராட்சி சுகாதாரப்பிரிவு வாகனம் TN 67A 7230 வாகனத்திற்கு ஆண்டு பராமரிப்பு செய்வதற்கும், மற்றும் தகுதிச்சான்று பெறுவதற்கும், ஓட்டுநர் 08.03.2019 அன்று விண்ணப்பம் கொடுத்துள்ளார். ஆகையால், மேற்க்கண்ட வாகனம் TN67 A 7230 தகுதிச்சான்று பெறுவதற்கு உத்தேச செலவுத்தொகை ரூ..90,000/—க்கு (ரூபாய் தொண்ணூறாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1760 / 2019 / எச்.1.</td><td>அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>300</td><td>பொருள் – 23<br>விருதுநகர் நகராட்சியில் ஒருங்கிணைந்த குடிசைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தில் நான்கு இடங்களில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சமுதாயக்கூடம் நகராட்சியால் கட்டப்பட்டு 2014—15ம் ஆண்டு முதல் பயன்பாட்டில் இருந்து வருகின்றது. கீழ்க்கண்ட சமுதாயக்கூடங்கள் நான்கும் குடிசைப்பகுதி அருகாமையில் அமைந்துள்ளது. சமுதாயக்கூடங்களில் பொதுமக்கள் தங்கள் இல்ல விசேஷங்களை குறைந்த வாடகையினை நகராட்சிக்கு செலுத்தி விழாக்களை நடத்தி பயன்பெற்று வருகின்றனர்.<br><br>
<table>
<tr><th>வஎண்</th><th>சமுதாயக்கூடம் அமைந்துள்ள இடங்கள்</th><th>வார்டு எண்கள்</th></tr>
<tr><td>1.</td><td>அகமது நகர் நீர்த்தேக்க வளாகம் ( பாவாலி சாலை)</td><td>16</td></tr>
<tr><td>2.</td><td>விஸ்வநாததாஸ் காலனி ( இராமமூர்த்தி சாலை )</td><td>35</td></tr>
<tr><td>3.</td><td>நாராயணமடம் தெரு</td><td>26</td></tr>
<tr><td>4.</td><td>சௌந்திரபாண்டியன் சாலை ( எப்.எப். ரோடு கறி மார்க்கெட் வளாகம்)</td><td>34</td></tr>
</table>
தற்போது சமுதாயக்கூடங்களில் ஆழ்துளை கிணறு மூலம் தண்ணீர் வசதியும் மற்றும் மும்முனை இணைப்பு மூலம் மின்சாரமும் வழங்கப்படுகிறது. பொதுமக்களிடம் வாடகையாக ரூ.2500/—(இரண்டாயிரம் மட்டும்) நகராட்சியால் வசூல் செய்யப்படுகிறது. மின்சார செலவினங்கள் மற்றும் பராமரிப்பு செலவினங்கள்</td><td>அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | அதிகம் ஏற்படுவதால் இனி வருங்காலங்களில் 01.04.2019ம் ஆண்டு முதல் ரூ.5000/—ம், குப்பை வரியாக ரூ.500/—ம் ஆக மொத்தம் ரூ.5500/—யை (ஐயாயிரத்து ஐநூறு மட்டும்) ஒரு நாள் வாடகையாகவும், அரை நாள் வாடகையாக ரூ.3000/—ம், குப்பை வரியாக ரூ.500/—ம் ஆக மொத்தம் ரூ.3500/— ஆகவும், (மூவாயிரத்து ஐநூறு மட்டும்) மேலும், GST வரியும் சேர்த்து உயர்த்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>ந.க.எண்.இ3/2000/2019. | |
| | 301 | **பொருள் – 24**<br>இந்நகராட்சியின் பொதுசுகாதார பிரிவு துப்புரவு ஆய்வர்களின் 28.02.2019ம் நாளைய குறிப்பின் படி 01.03.2019ம் மாதம் முதல் மூன்று மாதங்களுக்கு 57 தற்காலிக டெங்கு கொசுப்புழுக்கள் ஒழிப்பு பணியாளார்களை நியமனம் செய்து இந்நகர மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி ரூ.208/—ஐ நிர்ணயம் செய்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 8992 / 2014 / எச். | அங்கீகரிக்கப்பட்டது |
| | 302 | **பொருள் – 25**<br>பொதுசுகாதாரப்பிரிவு துப்புரவு பணியாளர்களுக்கு தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கு கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br>1. பயனியர்ஸ் ரூல்ஸ் & உறார்டுவேர்ஸ், திருச்சி.<br>2. பேன்சி அசோசியேட்ஸ், விருதுநகர்<br>3. அல்மாஸ் டிரேடர்ஸ், விருதுநகர்.<br><br>வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்த பேன்சி அசோசியேட்ஸ், விருதுநகருக்கு வேலைஉத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக்குறிப்பு : அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று உத்தரவு அளிக்கப்பட்டது. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1908 / 2019 / எச்.2. | அங்கீகரிக்கப்பட்டது |
| | 303 | **பொருள் – 26**<br><br>பொதுசுகாதாரப்பிரிவு துப்புரவு பணியாளர்களுக்கு தளவாட சாமான்கள் வாங்குவதற்கு 25.02.2019 அன்று நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட அனுமதியின் படி | அங்கீகரிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. அதில் கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.<br><table><tr><td>1.</td><td>செந்தூர் கன்ஸ்ட்ரக்சன்ஸ், விருதுநகர்</td><td>ரூ.523450</td></tr><tr><td>2.</td><td>கண்ணன் எலக்ட்ரிக்கல்ஸ், விருதுநகர்</td><td>ரூ.486600</td></tr><tr><td>3.</td><td>RVM ஏஜென்ஸீஸ் விருதுநகர்</td><td>ரூ.459900</td></tr></table><br>மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளியான RVM ஏஜென்ஸீஸ், விருதுநகருக்கு வேலைஉத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக்குறிப்பு : அவசர அவசியம் கருதியும், நகரில் திருவிழா காலம் என்பதாலும், பொதுசுகாதார பணி பாதிக்கப்படாத வகையிலும், தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1909 / 2019 / எச்.2.</td><td></td></tr>
<tr><td></td><td>304</td><td>பொருள் – 27<br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனத்திற்கு இந்நகர்மன்ற தீர்மானம் நாள்.28/02/2019ன் படி பழுது பணி பார்ப்பதற்கு கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.<br><table><tr><td>1.</td><td>ஜாய் இன்ஜினியர்ஸ், மதுரை</td><td>ரூ.64300</td></tr><tr><td>2.</td><td>எஸ்.பி.எஸ்.பி.எல்.177 இராஜபாளையம் அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ், அன் கோ, சென்டர் லிமிடெட், இராஜபாளையம்..</td><td>ரூ.66700</td></tr><tr><td>3.</td><td>ஆர்.ஏ.267 திருவில்லிபுத்தூர் அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் கோ - ஆப் சென்டர் லிமிடெட், திருவில்லிபுத்தூர்.</td><td>ரூ.61000</td></tr></table><br>மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளியான ஆர்.ஏ.267, திருவில்லிபுத்தூர் அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் கோ - ஆப் சென்டர் லிமிடெட், திருவில்லிபுத்தூருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக்குறிப்பு : தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2075 / 2019 / எச்.1.</td><td>அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>305</td><td>பொருள் – 28<br>இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் ஓட்டுநர்கள் பற்றாக்குறையாக இருப்பதனாலும், இந்நகராட்சி</td><td>அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | பகுதிகளில் குப்பை மற்றும் வாறுகால் தேங்கி இருப்பதனாலும், அதனை அப்புறப்படுத்த வேண்டியிருப்பதாலும், இந்நகராட்சியினை குப்பையில்லா நகரமாக மாற்ற நிர்வாகம் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் செயல்முறை ஆணை எண் . A7 /18069/ 2018, நாள்.24.07.2018ன் படி முற்றிலும் தற்காலிக பணியாளராக நியமனம் செய்யவும், 8 (எட்டு நபர்கள்) ஓட்டுநர்களை முற்றிலும் தற்காலிக பணியாளராக நியமனம் செய்யவும், அதற்கான உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேணடப்படுகிறது.<br><br>அலுவலக்குறிப்பு : 1. தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று முற்றிலும் தற்காலிக பணியாளராக வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 5045 / 2019 / எச்.1. | |
| | 306 | **பொருள் – 29**<br>விருதுநகர் நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டம் 2018-19ம் ஆண்டின் கீழ் இந்நகராட்சி பகுதி நாராயணமடத்தெருவில் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் களம் அமைப்பதற்கு இநங்கர்மன்றம் தனது தீர்மான எண்.108, நாள்.23.08.2018ல் ஒப்புதல் அளித்துள்ளது. ஆனால், அவ்விடத்தில் MCC shed அமைக்க கூடாது என பொதுமக்கள் ஆணையாளர் மற்றும் பொறியாளரிடம் ஆட்சேபணை கடிதம் கொடுத்துள்ளனர். மேலும், அவ்விடத்தில் போதுமான இடவசதி இல்லாததனாலும், பொதுமக்கள் ஆட்சேபணை கடிதம் கொடுத்துள்ளதாலும், அவ்விடத்தில் கட்டவிருந்த MCC shed மாற்று இடமான நகராட்சி உரக்கிடங்கில் அமைப்பதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறத.<br>அலுவலக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். E1 / 12146 / 2015 | அங்கீகரிக்கப்பட்டது நகராட்சிகளின் ஆணையாளர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுக்கலாம் |
| | 307 | **பொருள் – 30**<br>இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட 36 வார்டுகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் வீடுகளில் தண்ணீர் தொட்டிகளில் அபேட் மருந்து தெளித்தல் டெங்கு கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழித்தல், கொசு புகை மருந்து அடித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள மே, ஜீன், ஜீலை ஆகிய மூன்று மாதங்களுக்கு 30 பணியாளர்கள் (முப்பது மட்டும்) முற்றிலும் தற்காலிகமாக விருதுநகர் மாவட்ட ஆட்சியர் செயல்முறை ஆணை A7/18069/ 2018, நாள்.24.07.2018ன் படி பணி அமர்த்த அனுமதிக்கும், அதற்கான உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | ந.க.எண். 5045 / 2019 / எச்.1. | |
| | 308 | **பொருள் – 31**<br>இந்நகராட்சி ஆணையாளர் அறையில் வால்பேப்பர் ஒட்டும் பணிக்கு விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி **329** சதுரமீட்டர் x ரூ.**95** = **31255/–** கொடுத்துள்ள ஆனஸ்ட் ஆர்ட்ஸ், விருதுநகருக்கு வேலை உத்தரவு வழங்குவதற்கும், அதற்கான செலவுத்தொகையினை வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக்குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று முற்றிலும் வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2298 / 2019 / எச்.2. | அனுமதிக்கப்பட்டது |
| | 309 | **பொருள் – 32**<br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனம் TN67 A 7230க்கு தகுதி சான்று பெறுவதற்கு இந்நகர்மன்ற தீர்மானம் நாள்.08.03.2019ன் படி உத்தேச செலவுத்தொகைக்கு மன்ற அனுமதி பெறப்பட்டது. அதன் படி கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.<br><br>1. R.A.267 திருவில்லிபுத்தூர் அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் கோ-ஆப் சென்டர் லிமிடெட், திருவில்லிபுத்தூர். — ரூ.89500<br>2. ஜாய் இன்ஜினியரிங், மதுரை — ரூ.97000<br>3. Sp.SPL..177 இராஜபாளையம் அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ், அன் கோ, சென்டர் லிமிடெட், இராஜபாளையம். — ரூ.94900<br><br>மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளியான ஆர்.ஏ.267, திருவில்லிபுத்தூர் | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் கோ - ஆப் சென்டர் லிமிடெட், திருவில்லிபுத்தூருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக்குறிப்பு : அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>ந.க.எண். 1760 / 2019 / எச்.1. | |
| | 310 | **பொருள் – 33**<br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனம் TN67 BA 1600 வாகளத்திற்கு தகுதி சான்று மற்றும் பழுது பணி பார்ப்பதற்கு திரு.மாரிக்கனி, ஓட்டுநர் அவர்கள் உத்தேச செலவுத்தொகை ரூ.63,000/- கொடுத்துள்ளார். மேற்க்கண்ட தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக்குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>ந.க.எண். 2075 / 2019 / எச்.1. | அனுமதிக்கப்பட்டது |
| | 311 | **பொருள் – 34**<br>இந்நகராட்சி பகுதியில் உள்ள விருதுநகர் மாவட்ட தொழிற்சாலை வணிக வளாகங்கள மற்றும் குடியிருப்பு வீடுகளில் பொதுசுகாதாரத்தினை பேண வேண்டி பொதுமக்களுக்கு ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு செய்ய இந்நகர்மன்ற தீர்மான எண் படி மன்ற அனுமதி பெறப்பட்டது. அதன் படி கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.<br><br>1. \| நேதாஜி எலக்ட்ரிக்கல்ஸ், வாணியம்பாடி \| ரூ.43800<br>2. \| K.R.K. எலக்ட்ரிக்கல்ஸ், வாணியம்பாடி \| ரூ.44600<br>3. \| கிரீன் சொசைட்டி, சோலார் பேனல்ஸ் \| ரூ.42820<br><br>மேற்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. மேற்கண்ட பணிக்கு உத்தேச செலவுத்தொகை ரூ.35000/-க்கு மன்ற அனுமதி பெறப்பட்டதின் வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் குறைவான விலைப்புள்ளியான கிரீன் சொசைட்டி, சோலார் பேனல்ஸ்க்கு வேலை உத்தரவு வழங்கவும், கூடுதல் | பொதுசுகாதார பிரிவிற்கான விளம்பரம் செய்திடவும் தூய்மை இந்தியா பணிகளை பொது மக்களுக்கு தெரிவித்திடும் நோக்கிலும் இதனை வாங்க நடவடிக்கை எடுக்கலாம் தூய்மை இந்தியா |

| | | | |
|---|---|---|---|
| | | செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றப்பொருள் அனுமதிக்கு.<br>அலுவலக்குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குறைவான விலைப்புள்ளிக்கு வேலை உத்தரவு வழங்கியமைக்கும், கூடுதல் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1907 / 2019 / எச்.1. | திட்டத்தின் IEC- Information, Education ,Communication, என்ற நிதியில் இருந்து செலவு செய்யலாம் |
| | 312 | **பொருள் – 35**<br>விருதுநகர் நகராட்சி எல்கைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து கட்டிடங்களுக்கும் 2018-2019 முதலாம் அரையாண்டு முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளப்பட்டதனை, வரிவிதிப்புதாரர்களுக்கு சிறப்பு அறிக்கை (Special Notice) வாயிலாக தெரிவித்து பொது சீராய்வு மேற்கொள்ளப்பட்ட தொகையினை உடன் வசூல் செய்திடும் பொருட்டு, சீராய்வு அறிக்கை (Special Notice ) 31000 எண்ணம் 2 பிரதிகளில் ஜெராக்ஸ் நகல் எடுத்து வழங்கிட, அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி கோரியதற்கும், குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஜானகி பிரிண்டர்ஸ், விருதுநகர் என்பவருடைய விலைப்புள்ளி அனுமதி வழங்கியதற்கும் ரூ.48160/- ஜானகி பிரிண்டர்ஸ், விருதுநகர் என்பவருக்கு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக்குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 4718 / 2018 / அ1. | அனுமதிக்கப்பட்டது |
| | 313 | **பொருள் – 36**<br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனம் TN67 – 1600 TATA ACE மினிலாரிக்கு தகுதி சான்று பெறுவதற்கு இந்நகர்மன்ற தீர்மானம் நாள்.08.03.2019ன் படி உத்தேச செலவுத்தொகைக்கு மன்ற அனுமதி பெறப்பட்டது. அதன் படி கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.<br>1. ஜாய் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், மதுரை — ரூ.175000<br>2. வெற்றி ஆட்டோ மொபைல்ஸ், மதுரை — ரூ.168000<br>3. ஜெ.ஆர்.எம்.ஹைட்ராலிக் டிப்பர் பாடி பில்டிங், மதுரை. — ரூ.162000<br>மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளியான ஜெ.ஆர்.எம்.ஹைட்ராலிக் டிப்பர் பாடி பில்டிங், மதுரைக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலக்குறிப்பு : அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>ந.க.எண். 2073 / 2019 / எச்.1. | |
| | 314 | **பொருள் – 37**<br>விருதுநகர் நகராட்சியில் நகராட்சி பயன்பாட்டிற்கென ஒரு ஈப்பு வாகனம் மட்டுமே உபயோகத்தில் உள்ளது. மேற்கண்ட வாகனத்தை பயன்படுத்த இந்நகராட்சியின் வளர்ச்சிப் பணிகள், பொதுமக்களின் அத்தியாவசியமான குடிநீர் பணிகள் மற்றும் இந்நகரை தூய்மையான நகரமாக மாற்றுவதற்கு உரிய துப்புரவு பணிகள் போன்ற பணிகளை தினசரி கண்காணிக்க வேண்டியிருப்பதாலும், புதியதாக ஒரு ஈப்பு வாகனம் வாங்குவதற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.242, நாள்.31.01.2019 நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து வாகன கொள்முதல் செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. வாகனத்திற்கென பொருத்தப்பட்ட வேண்டிய கூடுதல் மின்சாதன உபகரணம் மற்றும் வாகனத்தின் அத்தியாவசிய இதர உபகரணங்கள் பொருத்துவதற்கென ஆகும் தோராய செலவின தொகை ரூ.1,10,000/– (ஒரு இலட்சத்து பத்து ஆயிரம் மட்டும்) ஆகும். எனவே, நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக்குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 3080 / 2008 /இ1. | அனுமதிக்கப்பட்டது |
| | 315 | **பொருள் – 38**<br>விருதுநகர் மாவட்டம், விருதுநகர் நகராட்சி குடிநீர் ஆதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் அருப்புக்கோட்டை, விருதுநகர் மற்றும் சாத்தூர் நகராட்சிகளை உள்ளடக்கிய தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. பாதாள சாக்கடைத்திட்டம் பயன்பாட்டில் இருப்பதாலும், புதிய கூட்டுக்குடிநீர் திட்டம் நாள் ஒன்றிற்கு நபர் ஒன்றுக்கு 135 லிட்டர் வீதம் குடிநீர் வழங்க வடிவமைக்கப்பட்டு உள்ள நிலையில் மதுரை சாலையில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி 4.80 இலட்சம் கொள்ளளவு கொண்டது புதியதாக அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினை கேட்டுக் கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக்குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 6949 / 2017 /இ2. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 316 | **பொருள் – 39**<br>விருதுநகர் மாவட்டத்திற்கு தலைநகரமாக அமைந்துள்ள விருதுநகர் நகரரட்சியின் மொத்த பரப்பளவு **6.64** சதுரகிலோமீட்டராகும். **2011** மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி மொத்த மக்கள் தொகை **72144.** தற்போது விருது நகர் பகுதியின் குடிநீர் ஆதாரமாக இரண்டு திட்டங்கள் மூலம் குடிநீர் கிடைக்கிறது. தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டம் (CWSS), வல்லநாடு, மற்றும் நகராட்சிக்கு சொந்தமான ஆனைக்குட்டம் குடிநீர் திட்டம் (Own Source), மூலம் கிடைக்கும் குடிநீரினைக் கொண்டு விருது நகர் பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆனைக்குட்டம் குடிநீர் திட்ட தலைமை பணியிடத்தின் மூலம் வரையறுக்கப்பட்ட குடிநீரின் அளவு **40.00** லட்சம் லிட்டர் ஆகும். தற்போது **25.00** இலட்சம் லிட்டர் குடிநீர் மட்டுமே கிடைக்கின்றது. மேலும் வறட்சிகாலங்களில் ஆனைக்குட்டம் நீர் ஆதாரம் வற்றிவிடுவதால் **6** மாத காலத்திற்க்கு நீர்வரத்து இருப்பதில்லை. தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் வரையறுக்கப்பட்ட குடிநீரின் அளவு **38.70** இலட்சம் லிட்டர். தற்போது இத்திட்டத்தின் மூலம் சராசரியாக நாள் ஒன்றுக்கு **25.00** இலட்சம் லிட்டர் குடிநீர் மட்டுமே கிடைக்கின்றது. பாதாள சாக்கடைத்திட்டம் செயல்படுத்தும் நகரம் என்பதால் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு **135** லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. விருதுநகரின் குடிநீர் தேவைக்காக நகரிலிருந்து **18** கி.மீ தொலைவில் அமைந்துள்ள அர்ச்சுனா ஆற்று நீரை ஆதாரமாக கொண்டு நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் ஆணைக்குட்டம் தலைமைப் பணியிடம் சுதந்திர இந்தியாவுக்கு முன்பாகவே நாள் **02.05.1938** ல் இருந்து குடிநீர்கென பராமரிக்கப்பட்டு தடுப்பு அனை (Check dam) மூலமாக ஆற்றில் தடுப்பு சுவர் மற்றும் கிணறுகள் அமைத்து இது நாள் வரை குடிநீர் பெற்று விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் எவ்வித பாதிப்பும் இல்லாமல் இதுநாள் வரை இதனை கொண்டு குடிநீர் பெறப்பட்டு வந்தது. விருதுநகர் நகராட்சியின் குடிநீர் ஆதாரம் மேலும் குறையாமல் இருக்கவும், குடிநீர் தட்டுப்பாட்டை போக்குவதற்காகவும், கோடை காலத்தில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படும் கால இடைவெளியை (No.of Days) குறைக்கவும் தடுப்பு அணை (Check dam) உயர்வு செய்தால் மட்டுமே விருது நகர் பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு இருக்காது. எனவே நவீன தொழில் நுட்ப வழி வகையில் மேற்படி பணிகளை விருதுநகர் நகராட்சி மேற்கொள்ள அதற்கான உத்திரவு வழங்கி உதவிடுமாறு, செயற் பொறியாளர், நீ.ஆ.அ,பொ.ப.து. வைப்பாறு வடிநில கோட்டம், விருதுநகர் அவர்களை கேட்டுக் கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.**1060/2019/**இ**2.** | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 317 | **பொருள் – 40**<br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனம் TN 67 A 7229க்கு தகுதி சான்று பெறுவதற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண். 98, நாள்.31.07.2018ல் அனுமதி பெறப்பட்டதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டது. அதற்கு கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br><br>1. ரவி மோகன் ஆட்டோ சர்வீஸ், விருதுநகர். — ரூ.200010<br>2. ஜாய் இன்ஜினியரிங் ஒர்கஸ், மதுரை. — ரூ.205792<br>3. வெற்றி ஆட்டோ மொபைல்ஸ் — ரூ.197532<br><br>மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள வெற்றி ஆட்டோ மொபைல்ஸ், மதுரைக்கு பணி செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக்குறிப்பு : அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 5910/ 2018 / எச்.1. | அனுமதிக்கப்பட்டது |
| | 318 | **பொருள் – 41**<br>மத்திய வீட்டு வசதி வாரியத்தின் செயர் அவர்களின் கடிதம் எண் 11(3)(5)/54 தொகுப்பு 11 நாள் 30-11-1954ன் படி விருதுநகர் நகராட்சியில் குறைந்த வருவாய் பிரிவினர் திட்டத்தின் கீழ் குடியிருப்பு வீடுகள் கட்டிகொள்வதற்கு நிதி பெறப்பட்டு இந்நகராட்சியில் 54 குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு, மேற்கண்ட குடியிருப்பு வீட்டினை இந்நகராட்சி குறைந்த வருவாய் பெறும் ஊழியர்களுக்கு மத்திய அரசின் கடிதத்தின் படி 37 குறைந்த வருவாய் ஊழியர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் உள்ள 54 வீடுகளில் 37 வீடுகள் தவிர 17 வீடுகள் நகராட்சி பணியாளர்கள் அல்லாத மற்றவர்களுக்கு மாத வாடகை ரூ.25/-க்கு வழங்கப்பட்டுள்ளது. மாத வாடகைக்கு விடப்பட்ட 17 வீடுகள் 30 வருடங்களுக்கும் மேலாக மாத வாடகை ரூ.25/- ஆக இருந்து வருவதாலும், விருதுநகர் நகராட்சி வெளியூர் பணியாளர்களுக்கு குடியிருப்பு வீடுகள் தேவைப்படுவதால் 17 வீட்டினை காலி செய்திட அறிவிப்பு கடிதம் அனுப்பட்டது, மேலும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை நிலை எண் 92 நாள் 03-07-2007ன் படி நகராட்சி அசையாச் சொத்துக்களை மாத வாடகைக்கு ஒப்படைத்து 9 ஆண்டுகள் முடிவுற்ற அனைத்து மாத வாடகை இனங்களுக்கும் சந்தை மதிப்பீட்டில் புதிதாக மாத வாடகை நிர்ணயம் செய்யலாம் என்ற அரசாணையின் அடிப்படையில் கீழ்கண்ட 17 குடியிருப்பு கட்டிடமானது மாத வாடகைக்கு ஒப்படத்து 30 | அனுமதிக்கப்பட்டது |

வருடங்களுக்கும் மேலாகி விட்டதால் தற்போதைய சந்தை மதிப்பீட்டின் படி மாத வாடகை ரூ.5000/- என நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்** | **மாத வாடகைதாரர்** | **முகவரி** |
|---|---|---|
| 1 | Thirumathi. Poonkodi | 50, LIG Colony, Virudhunagar |
| 2 | Thiru.A.Seenivasan | 17, LIG Colony, Virudhunagar |
| 3 | Thirumathi.S.P.Sakunthala | 19, LIG Colony, Virudhunagar |
| 4 | Thiru.P.Sawri Rajan | 13, LIG Colony, Virudhunagar |
| 5 | Thiru.K.Periasamy | 14, LIG Colony, Virudhunagar |
| 6 | Thirumathi.M.Chellam jaicelee | 20, LIG Colony, Virudhunagar |
| 7 | Thiru.S.Gnanamani | 30, LIG Colony, Virudhunagar |
| 8 | Thiru.K.S.Srinivasan | 32, LIG Colony, Virudhunagar |
| 9 | Thiru.N.Nagalingam | 39, LIG Colony, Virudhunagar |
| 10 | Thiru.S.Natarajan | 38, LIG Colony, Virudhunagar |
| 11 | Thiru.G.Subramaniyam | 35, LIG Colony, Virudhunagar |
| 12 | Thiru.Bagavathy | 11, LIG Colony, Virudhunagar |
| 13 | Thiru.K.Arunachalam | 9, LIG Colony, Virudhunagar |
| 14 | Thiru.Kaliyappan | 8, LIG Colony, Virudhunagar |
| 15 | Thiru.Ranjan | 47, LIG Colony, Virudhunagar |
| 16 | Thiru.Palraj | 2, LIG Colony, Virudhunagar |
| 17 | Thiru.Sankaralingam (late)<br>w/o S.Chinnammal | 1, LIG Colony, Virudhunagar |

அலுவலகக் குறிப்பு ;

1. மாத வாடகை ரூ.5000/- நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஒவ்வொரு பிரதி மாதமும் 5ம் தேதிக்குள் செலுத்தாத மாத வாடகைக்கு நகராட்சி குத்தகை விதிகளின் படி மேல் நடவடிக்கை எடுக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மத்திய அரசின் கலால் மற்றும் சுங்கவரி விதிகளின் படி 18 சதவீதம் சேவை வரி வசூல்

| | | | |
|---|---|---|---|
| | | செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண் ; 11419/1994/அ1. | |